www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNOTTAM

வெளியீடு - 13 10 ஏப்ரல் 2001 விலை:- 10.00

தமக்கென்று கொள்கைகளோ கருத்துக்களோ இல்லாதவர்கள் ஒரு சமூகத்துக்கு வழிகாட்ட எந்த அருகதையும் அற்றவர்கள்.

# பெருகிவரும் அராஜகமும் பேசாப்பொருளாகிவிட்ட தீர்வு யோசனைகளும்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, அதிகாரப்பகிர்வு, சமஷ்டிமுறையிலான தீர்வு என்று பேசப்பட்டு வந்த விடயங்கள் இன்று சந்தடியில்லாமல் அடங்கிப் போய் விட்டன.

இன்று இந்த நாட்டின் சகல பிரச்சினைகளுக்குமான தீர்வு அதிகாரப் பகிர்விலேயே தங்கியிருக்கின்றன.

தீர்வுதிட்ட யோசனைகளை கடந்த பாராளுமன்றத்தில் முன்வைத்து அந்த யோசனைகள் ஐ.தே.க யினால் எரிக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு வெளியே ஜே.வி.பியும், சிஹல உறுமயவும், பிக்குமாரும், மற்றும் இனவாதிகளும் கிளப்பிய குய்யோ முறையோ என்ற கூக்குரலின் பின்னர் அமுங்கிப் போயுள்ளன.

இந்த தீர்வுத் திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப் பட்டபோது அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தி ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களும் காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப் அவர்களும் ஆற்றிய உரைகள் எளிதில் மறந்துவிட முடியாதவை.







### தங்களுக்கென நிகழ்ச்சி நிரல் இல்லாத தமிழ்க்கட்சிகள்

ஆனால் நோர்வேயின் அனுசரணையாளர் உதவி கிட்டிய பின்னர் அன்றாட விடயங்களிலேயே காலம் கழிகிறது. தமிழ் மக்களின் பல்வேறு தரப்பினருடைய அபிப்பிராயங்கள் பெறப்பட்டு தீர்வு யோசனைகள் துரிதப்படுத்தப்பட வில்லை.

சில தமிழ்க்கட்சிகளோ புலிகளுடன் அரசு பேச வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவதுடன் தங்கள் கடமை முடிந்துவிட்டதாக கருதுகின்றன.

தமக்கென்றவொரு கொள்கை, தமக்கென்றவொரு அபிப்பிராயம் இருப்பதாக இவற்றின் செயற்பாடுகளில் இருந்து எதுவும் தெரியவில்லை.

தொடர்ச்சி 02பக்கம்


## புத்தாண்டு வாழ்த்துக்கள்

இருபது வருடங்கள் அனுபவித்த இன்னல்களுக்கும் துயரங்களுக்கும் இப்புத்தாண்டிலாவது விடிவு பிறக்கட்டும்.



# குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

மன்னாரில் கடற்படையினர் சிலரும், நாசகார ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிசார் சிலரும் கோஷ்டி கோஷ்டியாக இரு குடும்பப் பெண்களின் மீது மேற்கொண்ட பாலியல் பலாத்காரமும், சித்திரவதைகளும் இந்த நாடு 21ம் நூற்றாண்டில் வாழ்கிறதா? அல்லது காட்டுமிராண்டி யுகத்தில் வாழ்கிறதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளன. சிவமணி லெட்சுமணன், விஜிகலா நந்தகுமார் ஆகிய தாய்மார்கள் தமக்கு நேர்ந்த கொடுமைகளை மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் விபரித்துள்ளனர்.



இந்தச் சம்பவங்கள் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் நாகரீகமான பிரிவினரை மிகுந்த மனவேதனைக்கும் விசனத்துக்கும் உள்ளாக்கியுள்ளன.

இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கும், ஏனைய சிறுபான்மையின மக்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. இத்தகைய காட்டுமிராண்டித்தனங்கள் கடந்த இரண்டு தசாப்தங்களில் பல நடந்தேறியுள்ளன.

நூல் நிலையம் எரிக்கப்பட்டமை, சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசில் கைதிகள் படுகொலை

தொடர்ச்சி 04பக்கம்

# ஏகபிரதிநிதித்துவம் ஜனநாயக விரோதமானது

அண்மையில் நடைபெற்ற யாழ் மாநகர சபையின் வழமையான கூட்டமொன்றில் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் அஸ்லி வில்ஸ் யாழ் நூல் நிலையத்தில் ஆற்றிய உரை தொடர்பான கண்டனப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது.

அஸ்லி வில்ஸின் யாழ்ப்பாண உரையில் இனப்பிரச்சினை தொடர்பான பலதரப்பட்ட விடயங்கள் இடம் பெற்றிருந்தன. தென்னாசிய சமூகத்தில் நிறம், மொழி, மத, சாதி ரீதியான பிரச்சினைகள், ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றிய பல்வேறு விடயங்களும் இடம்பெற்றன.

அதில் யாருக்கும் உடன்பாடானவையும் இருக்கலாம். மாறுபாடானவையும் இருக்கலாம்.

ஆனால் அவர் ஆற்றிய உரையில் ஏகப்பிரதிநிதித்துவம் என்ற ஜனநாயக விரோத நிலைப்பாடு தொடர்பான ஆட்சேபனையும் இருந்தது. தமிழ் மக்கள் மத்தியில் மாறுபட்ட சிந்தனைகள், மாறுபட்ட அபிப்பிராயங்களுக்கு இடமின்மையையே அவ்வாறு குறிப்பிட்டார்.

மாநகர சபையில் அஸ்லி வில்ஸின் உரை தொடர்பான கண்டனப் பிரேரணையை மேயர் ரவிராஜ் அவர்களே கொண்டு வந்தார். இப்பிரேரணை தொடர்பாக தமது கருத்தை தெரிவித்த ஈ.பி.ஆர்.எல்.எப் மாநகர சபை உறுப்பினரும் முக்கியஸ்தருமான தோழர் த. சுபத்திரன், சிந்தனைக்குரிய சில முக்கியமான கேள்விகளை எழுப்பியிருந்தார்.



அஸ்லி வில்ஸ் தெரிவித்த ஏகப்பிரதிநிதித்துவம் மாறுபட்ட அபிப்பிராயங்களுக்கு இடமில்லையென்று கூறியதில் என்ன தவறு இருக்கிறதென்றும்,

மக்கள் எங்களை எதற்காகத் தெரிவு செய்தார்கள்? அந்தக் கடமைகளை நாம் செய்தோமா என்றும், அடுத்தடுத்து இரண்டு மாநகர முதல்வர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், உள்ளூராட்சி உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் கண்டனத் தீர்மானங்கள் கொண்டு வந்திருக்கிறோமா என்றும் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி 04பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்



## உன்னைத் திருத்து உலகம் திருந்தும்

எமது சமூகத்தில் எத்தனை விதமான தடைகள் இருந்தன. இருந்து வருகின்றன. தீண்டத்தகாதவர் என்று சொல்லி ஒரு கணிசமான பகுதி மக்களை இன்னுமொரு கணிசமான பகுதியினர் ஒதுக்கி வைத்த நிலை எமது சமூகத்தில் காணப்பட்டது. அது இன்றும் சொந்த நாட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் காணப் படுகின்றது.

முற்போக்கு என்று பாசாங்கு பண்ணும் போலித் தமிழ் தினசரிகள் தற்போதும் உயர்குலத் தோன்றல்களுக்கான திருமண விளம்பரங்களை இன்றும் செய்து கொண்டுதான் இருக்கின்றன.

யாழ்ப்பாண திருநெல்வேலி தனது சைவத் தமிழ்ப் பாரம் பரியத்தை இடம் பெயர்ந்தவர்களால் இழந்துவிட்டது என முற் போக்கு புத்திஜீவிப் பேராசிரியர்கள் அங்கலாய்ப்பதும் அவர்களின் கட்டுரைகளால் காணக்கிடக்கிறது.

இந்தத் தீண்டாமையின் தொடர்ச்சிதான் அந்த ஆதிக்க குணாம்சத்தின் மறுவடிவம்தான் புலிகள் தவிர்ந்த மாற்றுக்கருத் துடைய இயக்கங்கள் மீது கொண்டு வரப்பட்ட தடை. இந்தத் தடையை இந்த சமூகத்தின் கணிசமான பிரிவினர் ஜீரணித்துள் ளனர். ஜீரணித்தது மாத்திரமல்ல அதனை ஏற்றுக் கொண்டும் உள்ளனர்.

தாங்கள் ஆதிக்கவாதிகளாக நின்று மற்றவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்துகையில் தடைகளை, புறக்கணிப்புக்களை, திணிப்புக்களை மேற்கொள்வதில் இவர்கள் பேரானந்தம் கொள் கின்றனர்.

ஆனால் இவர்களுக்குள் ஒரு அடிமை மனோபாவம் உறை ந்து கிடந்தது. அதுதான் ஆங்கிலம் பேசும் வெள்ளைக்காரன் எமக்கு சாருமதியானவன் என்று.

தற்போது அவன் தன் பங்கிற்கு தடைவிதித்தபோது அது ஜனநாயக விரோதமாகவும் தமது உணர்வுகளை புண்படுத்துவதா கவும் தெரிகின்றது.

இன்று தமிழ் என்று பொங்குபவர்கள் ஈழ விடுதலைக்காக போராட புறப்பட்டவர்கள் மாற்று இயக்கக்காரர்கள் என்பதற்காக ரோட்டு ரோட்டாக போட்டு எரிக்கப்பட்ட சங்கதியைப் பற்றி வாய் திறப்பதில்லை. மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் குரூரமாக இரத்தச் சேற்றில் மூழ்கடிக்கப்படுவதைப்பற்றி மூச்சுக் காட்டுவ தில்லை.

எல்லாம் கன கச்சிதமாக இருப்பதாகவும் தமிழர்கள் மத்தி யில் ஜனநாயகமும், மனித உரிமைகளும் பூத்து குலுங்குவதாக வும் பாசாங்கு செய்கிறார்கள்.

ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுப வர்களை விட அதனை நியாயப்படுத்தும் பத்திரிகைக்காரர்களும் துதி பாடிகளும் ஆபத்தானவர்கள்.

அவர்களுக்கு எமது சமூகத்தின் அவலம் ஒரு பிழைப் பாகிவிட்டது.

இந்த முன்னுக்குப் பின் முரணான சந்தர்ப்பவாதப் போக்குக ளிலிருந்து விடுபடாதவரை "மாமியார் உடைத்தால் மட்குடம், மருமகள் உடைத்தால் பொற்குடம்" என்ற குணங்குறிகள் அற்றுப் போகாதவரை எமது சமூகத்திற்கு விமோசனம் இல்லை.

### காட்டுமிராண்டிகள்

பிந்தனுவெவ சிறை படுகொலைக்கு பின்னர் மன்னாரில் சிவமணி இலட்சுமணன், விஜிகலா நந்தகுமார் ஆகிய குழந்தை களின் தாய்மாராகிய இரு குடும்ப பெண்களின் மீது கடற்படை யினரும், பொலிசாரும் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனத்தை மன்னார் நீதி மன்றத்தில் எடுத்து கூறியுள்ளனர்.

தமிழர்கள் என்றால் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம். தமிழ் பெண்கள் என்றால் அவர்களை பாலியல் பலாத்காரத்துக் கும், சித்திரவதைகளுக்கும் உட்படுத்தலாம் என்ற மேலாதிக்க வெறி சிங்கள பொலிஸ் ஆயுதப்படையினர் சிலரால் அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கிருஷாந்தி பாலியல் பலாத்கார படுகொலை, அம்பாறையில் கோணேஸ்வரி என்ற தாய்மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் பயங்கரவாதப்படுகொலை பள்ளி முனை கமலிட்டா மீது மேற்கொள்ளப்பட்ட

பாலியல் பலாத்காரப்படுகொலை புங்குடுதீவு சாரதாம்பாள் என்ற தாய்மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை எல்லாம் இந்த மேலாதிக்க வன்முறையின் வெளிப்பாடே.

பொஸ்னியாவில் முஸ்லீம் பெண்கள் மீது மேற்கொள்ளப் பட்ட வன்முறைகளும் இந்த மேலாதிக்க வகைப்பட்டதே.

இத்தகைய கொடுமைகளை இழைப்பவர்கள் எவ்வித தயவு தாட்சணியமும் இன்றி மரணதண்டனைக்கு உள்ளாக்கப்படு வதற்கு ஏற்றவகையில் சட்டங்கள் திருத்தியமைக்கப் படவேண் டும். இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு இடமாற்றம் வழங்குவது அவர்களுக்கு அனுசரணையாக செயற்படுவது போன்ற ஒரு குற்றச் செயலாகும். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி.

## பெருகிவரும் அராஜகமும் பேசாப்பொருளாகிவிட்ட தீர்வு யோச...........

01ம் பக்க தொடர்ச்சி

புலிகளின் நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்களை மாத்திரம் பேசி விட்டு மௌனமாக இருக்கின்றன.

அந்தளவுக்கு தமிழ் அரசியல் வங்குரோத்தாகி விட்டது. தமிழ் அர சியல் தலைவர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டதனால் ஏற்பட்டுள்ள தலைமைத்துவ வெற்றிடத்தையே இது காட்டுகிறது.

இனப்பிரச்சினை தொடர்பாக எத் தகைய பேச்சுவார்த்தை நடப்பதாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் அபிப்பிராயங்கள் பெற ப்படுவதே ஜனநாயக முறையாகும்.

ஆனால் இங்கு பேச்சுவார்த்தை கள் எதுவும் தொடங்குவதற்கான அறிகுறிகளே இல்லை.

சமகாலத்தில் இத்தகைய பிரச் சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணப் பட்டது என்பதற்கு தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் அனுபவங்கள் பெறப்பட வேண்டும்.

இங்கு ஒருமுறை விஜயம்செய்த தென்னாபிரிக்க தூதுக்குழுவொன்று சிறியதோ, பெரியதோ வெவ்வேறு அரசியல் சமூக ஸ்தாபனங்கள், பொது மக்களின் சுதந்திரமான பங் குபற்றுதலுடனேயே அங்கு பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதை சுட்டிக் காட்டியுள்ளன.

தீர்வு வெகுவிரைவில் கிட்டவே ண்டு மென்பதே வடக்கு கிழக்கு மக்களின் இன்றைய நிலையாகும். மக்களின் வாழ்க்கை சகிக்கமுடியாத கட்டத்தை அடைந்துள்ளது. தொழில், கல்வி, போக்குவரத்து போன்றவற்றி ற்கு அப்பால் உயிர்வாழ்தல், மானத் தோடு வாழ்தல் என்பதே இங்கு பெரும் பிரச்சினையாகி விட்டது. மக்கள் சகல விதமான நம்பிக்கைக ளையும் இழந்து வருகிறார்கள். இது ஆரோக்கியத்துக்கு அறிகுறியல்ல.

வரவு செலவு திட்டம் மக்கள் மேல் சுமையை ஏற்றுவதாகவும், யுத்த பகுதிகளில் வாழும் மக்கள் மேல் மேலும் பல மடங்கு சுமையை ஏற்று வதாகவும் அமைந்துள்ளது.

### வன்முறைகள் சமூகமயமாகிவிட்டன

பிரச்சினைகளுக்குத் தீர்வில்லாது இழுபட்டுச் செல்லும் சூழ்நிலை பா தாள உலக கோஷ்டிகளின் செயற் பாடுகளை அதிகரிக்கச் செய்துள்ளன. நாட்டின் எந்தப் பகுதியிலும் இந்த நாட்டின் பிரஜைகளுக்கோ அல்லது வெளிநாட்டு பிரஜைகளுக்கோ பாது காப்பில்லை என்ற நிலை உருவாகி யுள்ளது.

கொள்ளை, கொலை, பாலியல் பலாத்காரம் நாளாந்த நிகழ்வுகளாகி விட்டன.

சிறைகளில் பதட்டம், தறிகெட்ட விலையேற்றம், இதன் விளைவாக சாதாரன மக்கள் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் மத்தியில் அதிருப்திகள் பெருகியுள்ளன. வட க்கு கிழக்கில் இவர்கள் கால்பட்டினி, அரைபட்டினியுடனேயே வாழ்கிறார் கள்.

நாடு சுபீட்சத்தை நோக்கிச்செல் கிறது என்பது வெறும் வார்த்தை ஜாலங்களாகவே இருக்கின்றன. மக் கள் மனதில் நம்பிக்கையை ஏற்படு த்த துரிதமாக காரியங்கள் ஆற்றப்பட வேண்டும்.

## நிபந்தனைகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை !?

நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்ட் பேர்க்கும், தூதரக இரண்டா வது செயலாளரும் புலிகளின் அரசி யல் பிரிவு தலைவர் தமிழ்செல்வன் தலைமையிலான குழுவினருடன் நட த்திய கலந்துரையாடலில் நிபந்த னையற்ற பேச்சுவார்த்தையையும் புலி கள் மீதான தடையை சிறீலங்கா அரசு நீக்க வேண்டுமென்றும் வலியு றுத்தி உள்ளார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற தலைப்பை மனிதாபிமான நடவடிக் கையென்று மாற்றியதற்கு ஆட்சே பனை தெரிவித்துள்ளார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தடையை நீக்குதல் பற்றி ஜனநாயக ரீதியான வார்த்தைகளை பாவிப்பது சற்று ஆச் சரியத்தை ஏற்படுத்தவே செய்கிறது.

ஊருக்கே உபதேசம் உனக்கல் லடி கண்ணே என்று தமிழ் சமூகத் தை பார்த்துச் சொல்வது போல் இருக்கிறது. கடந்த 15 வருடங்களு க்கு மேலாக தமிழ் அரசியல் கட்சி கள் மாற்று கருத்துடைய புத்திஜீவி கள், சாதாரண பிரஜைகள் மீதான தடையைப்பற்றி அவர்கள் இதுவரை ஒரு வார்த்தையைதன்னும் உதிர்த் தது இல்லை.

தம்மை தவிர அனைத்து தமிழ் அரசியல் இயக்கங்களுக்கும் தேசத் துரோகிகள் என்று பட்டம் சூட்டிய இவர்கள் தம்மை பயங்கரவாதிகள் என்று தீவிரமாக கருதும் ஒரு அரசி டமிருந்து எவ்வாறு தடை நீக்கத்தை எதிர்பார்க்கிறார்கள்?

தடை நீக்கப்படாதவரை பேச்சு வார்த்தை சாத்தியமில்லை என்று ஒரே போடாக போட்டுள்ளார்கள். எனவே பேச்சுவார்த்தை நடைபெறு மா என்ற சந்தேகம் எழவே செய்கிறது.

எது எப்படியிருப்பினும் இனப்பிர ச்சினைக்கு ஆக்கப்பூர்வமான தீர்வு காணும் முயற்சிகளிலிருந்து அரசு பின்வாங்கக் கூடாது. அதில் அக்க றையுள்ள சக்திகளின் உதவியுடன் முயற்சிகள் தொடர வேண்டும்.

தமிழ் மக்கள் அனுபவித்த துய ரங்கள் போதும் போதுமென்றாகிவிட் டது. அவர்களின் சமாதான நம்பிக் கைகள் அவநம்பிக்கைகளாக போய் விடக்கூடாது. அதிகாரப் போட்டி விளையாட்டிற்கு தமிழ் மக்கள் பலி யாக்கப்பட்டு விடக்கூடாது.

## அன்பார்ந்த நண்பர்களு.......

03ம் பக்க தொடர்ச்சி

யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம், சுமூகமான சூழ்நிலை என புலிகள் அடுக்கும் வார்த்தைக ளை நம்பும் நிலையில் இன்று யாரும் இல்லை. இருப்பினும் "கெட்டிக்கார னின் பொய்யும் புரட்டும் தக்கு முக் குத் திக்குத் தாளம், எட்டு நாளைக் குள் தெரிந்து போகும் தக்கு முக்குத் திக்குத் தாளம்" என்பதால் புலியைப் பசு வேடம் கட்டி ஆடவிட்டுப் பார்க்க நோர்வே விரும்புகின்றது.

இந்தத் தடவையும் பழைய நாட கங்களை அரங்கேற்ற முயற்சிப்பது "கரணம் தப்பினால் மரணம்" என்பது தம்பிக்குத் தெரிய வேண்டும்.

தமிழ்மக்களின் பொதுநலன்க ளைக் காப்பாற்ற புலிகள் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து நின்று ஒத்துழைத்தால் அது தமிழ் மக்களுக்கு பெரும் அரசியல் வல்ல மையைத் தரும் என்பதில் சந்தேக மில்லை. பிரபாகரன் விரும்பியோ விரும்பாமலோ தனது புலிகளின் நலன்களைக் குறைந்த பட்சம் காப் பாற்றிக் கொள்ள விரும்பினால் ஜன நாயகத்தை ஏற்றேயாக வேண்டும்.

அதன் மூலம் ஏனைய தமிழ்க் கட்சிகளின் இருப்பை ஏற்றேயாக வேண்டும். பிரபாகரன் புலிகள் மட்டு மே தமிழ் மக்களின் தனிப்பிரதிநிதி கள் என இனியும் வரட்டுத் தனமாக -ஒன்றுக்கும் பயனற்ற விதமாக நினை த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை.

எத்தனையோ ஆயிரக்கணக்கான இளைஞர்களின் கழுத்தில் சைனைட் குப்பியைக் கட்டிவிட்டு தியாகியாக வோ, துரோகியாகவோ செத்தேயாக வேண்டுமென பலிகொடுத்த- பலியெ டுத்த பிரபாகரன் இன்று தனது கழு த்தில் இருக்கும் சைனைட் குப்பியை எப்படியாவது கடித்தாக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இது அழகுக்காக முதலில் கட்டப்பட்டிரு க்கவும் கூடும்.

ஆனால் விளையாட்டு வினைக் கட்டத்தை அடைந்து விட்டது. பிரபா கரன் இப்போது தன்னைத் தானே துரோகியாகவோ, தியாகியாகவோ தீர்மானிக்க வேண்டிய கட்டம் ஏற் பட்டுவிட்டது. அதைப்பற்றித் தமிழர் கள் கவலைப்படாத ஒரு நிலையை உருவாக்கியதுவும் பிரபாகரனே.

சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக் கும் இடையில் பேச்சுவார்த்தை விரை வில் நடைபெறும் என்று இப்போது பேச்சுக்கள் வலுவாக அடிபடுகின்றன. அன்பு நண்பர்களே அடுத்த கடிதத் தை நான் உங்களுக்கு எழுதும் போது உக்கிரமான பேச்சுவார்த்தை நடக்குமா? அல்லது வக்கிரமான யுத்தம் மூண்டெழுந்து நிற்குமா என் பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இப்படிக்கு**
**உங்கள் அன்பு நண்பன்**
**அ. வரதராஜப்பெருமாள்**


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**
**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

[redacted]

E.P.I.C., Box No: 0362
7 1603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 27118

141A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 32822

மின் அஞ்சல் முகவரி [E-MAIL ADDRESSES]
epiclondon@gn.apc.org - LONDON


படிப்பகம்

www.padippakam.com



திரு. அ. வரதராஜப்பெருமாள் அவர்கள்

# அன்பார்ந்த நண்பர்களுக்கு!

## எட்டாவது கடிதம் -ஏழாவது

**அன்பார்ந்த நண்பர்களே!**

கடந்த கண்ணோட்டத்துக்கு எனது ஏழாவது கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தபோது, பிரிட்டன் அரசாங்கம் புலிகளைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகளும், புலிகளைத் தடைசெய்யும் படி சிறீலங்கா அரசின் கோரிக்கைகளும், புலிகளைத் தடைசெய்ய வேண்டாமென தூதரகங்கள் தோறும் புலிகளால் தடை செய்யப்பட்ட சில தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

பின்னர் கண்ணோட்டம் அச்சில் ஏறிக் கொண்டிருந்தவேளை பிரிட்டன் அரசாங்கம் புலிகளையும் தடைசெய்யப்படும், பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்து வெளியிட்டது. கடந்த கடிதத்தின் தொடர்ச்சியாக இங்கு வேறு சில விடயங்களையும் கூறவிரும்புவதால் அந்த நிகழ்வுகளை இங்கு குறிப்பிடுகிறேன்.

### தங்களை ஆதரித்தால் ஒத்துப்பாடுவதும் இல்லாவிடில் இழித்துரைப்பதும் அவர்களின் வழமை

"மகாராஜா (மகாராணியும்) எந்த வேளையிலும் தவறு செய்யமாட்டார்" என பிரிட்டனில் சட்ட வல்லமை கொண்ட எழுதப்படாத ஒரு மரபு ரீதியான ஏற்பாடு உள்ளது. "வெள்ளைக்காரனெண்டால் நீதி நியாயம் தெரிஞ்சவன். ஆனபடியாத்தான் மகாத்மா காந்தியின்ர சத்தியாக்கிரகத்துக்கு மதிப்பளிச்சு இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்தவங்கள்" என இலங்கையின் படித்த தமிழர்கள் மத்தியில்-அரசியல் வரலாறு தெரிந்தவர்களைத் தவிர்ந்த ஏனையோர் பெருந்தொகையினர் மத்தியில்-ஒரு நம்பிக்கை இன்னமும் உள்ளது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட தனது கடந்த பிறந்த தின உரையில், பிரித்தானியர்களின் காலனித்துவ ஆட்சிக்காலம் தமிழர்களுக்குப் பொற்காலம் எனப் பொருள்படப் பேசியிருப்பதையும் நாம் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

இந்தியா, அமெரிக்கா ஆகியவற்றின் வரிசையில் இப்போது பிரிட்டனும் புலிகளை ஒரு மக்கள் விடுதலை இயக்கமல்ல, விடுதலைப் போராட்டப் போர்வை போர்த்திய ஒரு பயங்கரவாத இயக்கமே எனப் பிரகடனம் செய்துள்ளது.

1987க்கு முன்னர் இந்தியா புலிகளுக்கு அமோகமாக ஆயுதங்களையும் நிதி வளங்களையும் அள்ளிக் குவித்து வழங்கிக் கொண்டிருந்தபோது "இந்தியாவே தமிழர்களின் ஆபத்பாந்தவன்", "இந்தியாவே தமிழர்களின் தாய் மண்", இந்தியா புலிகளையே தனித் தலைமையாக அங்கீகரிக்கின்றது", இந்தியாவின் ஆதரவு தமிழர்களுக்கு உள்ளவரை புலிகளின் தாயக விடுதலைப் போராட்டத்தை உலகின் எந்த சக்தியும் அசைக்க முடியாது என்றெல்லாம் இந்தியாவையும் தங்களையும் இணைத்து புலிகள் பெருமைப் பட்டுக் கொண்டார்கள்.

ஆனால் புலிகளின் சுயவயப்பட்ட பிடிவாதமான போக்கினால் இந்தியா புலிகளின் மீது நெருக்குதல்களை ஆரம்பித்தபோது இந்தியப் படைகளுக்கு எதிராக ஒரு யுத்தத்தை நடத்தியதின் மூலமும், பின்னர் பிரேமதாசா அரசுடன் கைகோர்த்து இந்தியாவை இப்பிரச்சினையிலிருந்த வெளித்தள்ள முயன்றதன் மூலமும் தமிழர்களின் நியாயமான போராட்டத்தை புலிகள் ஒரு குழப்பமான நிலைக்குள் தள்ளிவிட்டார்கள். அன்றைய வேளைகளில் புலிகள், இந்திய அரசை "ஆக்கிரமிப்பாளர்கள்" என வர்ணித்து சிங்கள பௌத்த பேரினவாதிகளோடு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

தங்களை ஆதரித்தால் ஒத்திசைப் பாட்டுப் பாடுவதுவும், தமது குறுகிய நலன்களுக்கு ஒத்துழையாதவர்கள்- இடமளிக்காதவர்களை இழிவாய் எதிர்ப்பதுவும் புலிகளின் வழமை. புலிகளின் ஆதரவாளர்கள் என்று சொல்லப்படுவோர் தமக்கென்று சுயமான சிந்தனை எதுவுமில்லாமல் புலிகளை விட மேலும் ஒருபடி ஏறிநின்று, சாமியை விட ஆசாமிக்கே பக்தி அதிகம் என்பது போல், புலிகளுக்கு கோரஸ் இசைப்பதே இதுவரை வழமை.

இந்தியாவுக்கு எதிராக எத்தனை விதமாக இழிவான வசைப்பாடல்களைப் பாடிய புலிகளின் ஆதரவாளர்களில் எத்தனை சதவீதமானோர் இப்போது பிரித்தானியாவுக்கு எதிராகக் குரலெழுப்புவார்கள் என்பது கேள்விக்குரியதே.

இங்கு ஒரு வித்தியாசம் உண்டு. வெள்ளைக்கார நாடுகளிலுள்ள தீவிர புலி ஆதரவாளர்கள்கூட பிரித்தானியாவுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடும் துணிச்சலும் அக்கறையான ஈடுபாடும் உடையவர்களல்ல. அவ்வாறு நடந்து கொள்வது தமது சொந்த நலன்களைப் பாதிக்கும் எனக் கருதுவர்.

புலிகளின் தத்துவவித்தகர் பாலசிங்கம் இதுவரை தானே புலிகளின் சித்தாந்தி, தான் சொல்வதைத்தான் பிரபாகரன் செய்கிறார் என்றவாறு செயற்பட்டார். லண்டனின் பெரும் அரங்கங்களில் புலிகளின் பெருமைகளையெல்லாம் தூஷண வடிவங்களுக்குக் குறையாத தரத்தில் பேருரைகளாக ஆற்றினார்.

இப்போது அவர் தலையையும் கால்களையும் ஓட்டுக்குள் அடக்கிக் கொண்டுவிட்டதாகக் கூறப்படுகின்றது. அவரின் மனைவியான அடேல் பாலசிங்கத்துக்கு அவரின் தாய்நாடான அவுஸ்திரேலியா செல்ல அனுமதி மறுக்கப்பட்டு விட்டதாகவும் நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன.

### புலிகளை தடைசெய்வதால் ஐரோப்பிய நாடுகளுக்கு எந்த நட்டமும் இல்லை

லண்டனில் புலிகளின் நிதிதிரட்டும் காரியாலயமான "தமிழர் புனர்வாழ்வுக் கழகம்" ஏற்கனவே பிரிட்டன் அரசின் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு மூடப்பட்ட நிலையில் உள்ளது. தங்களின் லண்டன் தலைமைக் காரியாலயத்தையும் தடை வருவதற்கு முன்னரே புலிகள் மூடிவிட்டதாக அறியப்படுகின்றது. ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் அட்டகாசம் புரிந்து திரிந்த புலிகள் தங்கள் வால்களைச் சுருட்டிக் கொண்டு அடக்க ஒடுக்கமாகத் திரிகிறார்களாம்.

புலிகளின் அமைப்பில் கூலிக்காக வேலை செய்தவர்கள் எல்லாம் வேகமாகக் கழன்று கொண்டிருக்கிறார்கள். இதுவரை தங்களைப் புலிகள் என்று சொல்லி சண்டித்தனம் பண்ணி வந்தவர்கள் இப்போது ஒன்றும் அறியாத அப்பாவிகள் போல் தலையைக் குனிந்தபடி ஐரோப்பிய வீதிகளில் அமைதியாகத் தங்கள் தங்கள் அலுவல்களில் சுறுசுறுப்பாக உள்ளனர்.

புலிகளுக்குப் பிரித்தானியாவில் ஏற்பட்டுள்ள நிலைமையானது அடுத்தடுத்து பிரான்ஸ், ஜேர்மனி, ஏனைய ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் தொடர்ந்து ஏற்படவுள்ளன. இவ்விடயத்தில் நாட்டுக்கு நாடு சில மாதங்கள், சில வாரங்கள் என இடைவெளிகள் வேறுபடும். ஆனால் புலிகள் மீதான தடைத் தொடர் நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாதவையாகும். இது சிறீலங்கா அரசின் முயற்சிகளின் வெற்றி தோல்வி சம்பந்தப்பட்ட விடயமல்ல, மாறாக சர்வதேசரீதியில் அரசியல் உறவுகளில் ஏற்பட்டிருக்கும் பாரிய மாற்றங்களினது விளைவுகள் என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

புலிகளைத் தடை செய்வதால் தமக்கு அரசியல் பொருளாதார ரீதியில் லாபமே தவிர நட்டமில்லை என ஐரோப்பிய நாடுகளும், கனடா மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளும் கருதுகின்ற போது இந்த நாடுகள் புலிகளைத் தடை செய்யும் வரிசையில் விரைவாகச் செயற்படும் என்பதை நாம் எதிர்பார்த்தேயாக வேண்டும்.

### சில தமிழர்களின் போலியான மாயை

வடக்கு கிழக்கில் அங்குமிங்குமாக சில பல்கலைக் கழக மாணவர்கள் பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலமோ, திடீரென விழித்தெழும்பியது போன்ற சில மதகுருமாரின் கோரிக்கைகளோ, "துரோகக்" கட்சிகளின் தூதரகப் படியேறல்களோ புலிகளின் மீதான நாடுகளின் தடை நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தப் போவதில்லை. புலிகளும், புலிகளின் அதிதீவிர ஆதரவாளர்களும் சாதாரண தமிழர்கள் மத்தியில் போலியான, மாயையான கருத்துக்களைப் பரப்புவதுபோல இந்த வளர்ச்சியடைந்த நாடுகளையும் நம்பவைத்து விடலாம் என முயற்சிப்பது பயனற்றதாகும். மாறாக தங்களைத் திருத்திக் கொள்ள முயற்சிப்பதே அர்த்தமுடையதாகும்.

புலிகளின் அடிக்கும் ஆற்றலைக் கொண்டு தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமானவைகளைச் சிங்களவர்களிடமிருந்து பெற்றுவிட வேண்டும் என்று கருதுகின்ற தமிழர்கள் பலர் புலிகள் மீதான இந்தத் தடை கண்டு அச்சம் கொள்கின்றனர் - விசனம் கொள்கின்றனர். இதிலுள்ள உண்மையின் அளவு, மாயையின் அளவு ஒருபுறமிருக்க, ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியாவிலுள்ள பெரும்பான்மையான தமிழர்கள் மத்தியில் இந்த தடை மற்றும் புலிகள் மீதான நெருக்குதல்கள் தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாடுகளில் அதிகரித்துக் கொண்டிருப்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள்.

ஏனெனில் தாம் வாழும் நாடுகளில் புலிகளின் மீதான தடைகள் அதிகரிக்கின்ற போது, புலிகள் தம்மிடமிருந்து நேரடியாக வலுக்கட்டாயமாகவும், மறைமுகமான பயமுறுத்தல்கள் மூலமாகவும் பணம் திரட்டும் நடவடிக்கைகள் நிறுத்தப்படும் என மகிழ்வது இயல்பானதேயாகும்.

இலங்கையில் கொழும்பிலும், வடக்கு-கிழக்கிலும் இருந்து கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன் என அகதி அந்தஸ்த்துப் பெறுவதற்கான பயணத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் பலருக்கு பிரிட்டனின் தடைச் சட்டம் உடனடியாக ஒரு பயத்தையும் கவலையையும் கொடுத்திருக்கிறதெனினும், இவர்கள் புலிகள் மீதான தடைக்கும், தமிழர்களை இந்த நாடுகள் அகதிகளாக ஏற்பதற்கும் இடையில் எந்தவித சம்பந்தமுமில்லை என்று கண்டுகொள்ளுகின்றபோது புலிகள் மீதான தடையைப் பற்றி இவர்கள் எந்தவித கவலையையும் கொள்ளப்போவதில்லை.

### அன்பின் நண்பர்களே,

பொருளாதாரரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசியற் பொருளாதாரத் தேவைகளுக்கு வறிய நாடுகளிலிருந்து- ஒப்பீட்டுரீதியில் கூலி குறைவான நாடுகளிலிருந்து மூளைத்திறன் உழைப்பாளர்களும், உடற்திறன் உழைப்பாளர்களும் தேவைப்படும் வரை இலங்கைத் தமிழர்களுக்கும் அந்நாடுகளில் இடம் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

எவ்வாறாயினும் இனி ஒரு வித்தியாசத்தைப் பார்க்கலாம். அதாவது, எப்படியோ பல லட்சங்களைச் செலவழித்து சட்டவிரோத வழிகளில் மேலைத்தேய நாடுகளைச் சென்றடைந்து அகதி அந்தஸ்தைக் கோரும் தமிழர்கள் இனிமேல் இலங்கையில் தாங்கள் பாதுகாப்பாக இருக்க முடியாமைக்கு புலிகளின் பயங்கரவாதமே காரணம் எனச் சுருக்கமாகச் சொல்லி தம்மை உத்தியோகபூர்வ அகதிகளாக்கிக் கொள்வதற்கான அதிக வாய்ப்பேற்பட்டுள்ளது.

தாங்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்பதால் சிறிலங்கா அரச படைகள் மற்றும் அரச சார்பு ஆயுதக் குழுக்களினால் தமக்கு ஆபத்து எனக் கூறுவதையெல்லாம் நிறுத்திக் கொள்வார்கள். மேலைத்தேய நாடுகளின் அரசநிறுவனங்களுடன் தொடர்புகள் கொண்டுள்ள பெருங்குடித் தமிழர்கள் இனிமேல் தமக்கும் புலிகளுக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை எனக் காட்டுவதிலும், அதிலும் ஒரு படி மேலே போய் புலிகளின் பயங்கரவாதம் எப்படியெல்லாம் கொடூரமானது எனச் சித்தரித்துக் காட்டுவதிலும் மிகுந்த அக்கறையெடுத்துக் கொள்வர்.

அமெரிக்காவில் இது ஏற்கனவே நடந்து வருகின்றது. இந்தநிலைமை ஏனைய நாடுகளுக்கும் விரைவாகப் பரவும் என நாம் எதிர்பார்க்கலாம். புலிகளால் வளர்த்துவிடப்பட்ட இந்த நோய் இப்போது புலிகளையே தாக்கத் தொடங்கியுள்ளது. அவ்வளவுதான்.

### உலக யதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும்

பிரபாகரன் இனியும் உலக யதார்த்தத்தையும் உள்ளூர் நிலைமையையும் புரிந்து கொள்ளத் தயாராக இல்லாமல், கொலைகள், படுகொலைகள் செய்விப்பதில் தனக்கிருக்கும் திறமைகளையும், தன்னை நம்பும் இளைஞர்களை நூறு, ஆயிரமென கொலைக்களங்களுக்கு அனுப்பி பலிகொடுப்பதில் கிஞ்சிற்றும் கவலைப்படாத தனது வக்கிர ஆற்றலையும் நம்பி தொடர்ந்தும் அதேபாதையில் செயற்பட்டால், மிக விரைவில் பிரபாகரனும், அவரின் நெருங்கிய யுத்தசகாக்களும் சர்வதேச நாடுகளினால் "யுத்தக் குற்றவாளிகள் (warcriminals)", "சர்வதேச போதைப் பொருட்கள் கடத்தற் குற்றவாளிகள்" எனப்பிரகடனப்படுத்தப்படும் நிலையையும் மிகவிரைவில் எதிர்பார்க்க வேண்டியிருக்கும்.

தவறுகள் மேல் தவறுகள் எனச் செய்து தமிழ்ச் சமுதாயத்தின் நீதியான போராட்டத்தையும் சீரழித்து, தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்காலத்தையே திக்கற்ற நிலைக்கு உள்ளாக்கியுள்ள பிரபாகரனும் புலிகளும் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஒரு நல்லதைச் செய்யக் கூடிய வாய்ப்பு இப்போதும் உண்டு.

தமது தவறான கடந்த கால நடவடிக்கைகள் மூலம் பிரபாகரனும், புலிகளும் தாங்கள் தப்பிக்க முடியாத ஒரு பிரமாண்டமான சமூக மற்றும் தேசிய எதிர்ப்பை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இப்போதும் சர்வதேச மன்னிப்பைப் பெறவும், சமூகக் கோபத்தைத் தணிக்கவும் புலிகளுக்கு வாய்ப்புக்கள் உண்டு. பிரபாகரன் தனது நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டு, தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகம் நிலவுவதற்கும், தமிழ் மக்கள் நியாயமான உரிமைகளுடன் இலங்கையில் ஏனைய மக்களுடன் சமமாகவும் சமாதானமாகவும் வாழுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் ஒத்துழைக்க வேண்டும்.

### ஆக்கபூர்வமான வழிகளில் தமது சக்தியை பிரயோகிப்பார்களா

புலிகளின் பலமும் ஆற்றல்களும் இதுவரை அழிவுகளுக்கும் சீரழிவுகளுக்குமே பயன்பட்டு வந்திருக்கின்றது. ஒரு பகுதிச் சிங்களவர்களாயினும் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பதற்குக் காரணம் புலிகளின் தாக்குதல் ஆற்றல்கள் என்றே பல படித்த தமிழர்கள் நம்புகின்றனர். ஒரு விவாதத்துக்கு அப்படியே எடுத்துக் கொள்வோம். புலிகள் உடன்படுவார்களானால் ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு உயர்ந்தபட்ச சமஷ்டியை வழங்குவதற்கு மிகப் பெரும்பான்மையான சிங்களவர்கள் ஆதரவளிப்பார்கள் என சிங்களப் புத்திஜீவிகள் பெரும்பாலோர் மத்தியில் வலுவானதோர் அபிப்பிராயம் உள்ளது.

எங்கே பிரபாகரன் இதனை தனது புலிகளின் பலம் கொண்டு அறுவடை செய்து தமிழர்களுக்கு வழங்கட்டும் பார்க்கலாம். பிரபாகரனைக் கொண்டு உருப்படியாக அதனைச் செய்விக்க மதகுருமார்களினாலோ, பல்கலைக்கழக மாணவர்களினாலோ, புலிகளின் ஆதரவுப் பிரமுகர்களினாலோ முடியுமா? புலிகளுக்கு அரோகரா போடும் இவர்கள், செய்த பாவங்களுக்கு மன்னிப்பாக புலிகளைக் கொண்டு ஆக்கபூர்வமாக இதைச் செய்விக்க தாமும் காலத்தையும் சக்தியையும் பிரயோகிப்பார்களா?

புலிகள் தாங்கள் கிண்டிய சவக்குழிகளை நோக்கி தங்களையும் புதைக்க விரைந்து கொண்டிருக்கிறார்கள். பிரபாகரன் தன்னலனை மறந்து தமிழ் மக்களின் நலன்களுக்கு இப்போதாயினும் முன்னுரிமை கொடுத்தால் புலிகளின் எதிர்கால நலன்களை ஓரளவாயினும் காப்பாற்றிக் கொள்ள முடியும். தமிழ் மக்களின் பொதுநலன்களும், புலிகளின் நலன்களும் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று முரணாண கட்டத்தை ஏற்கனவே அடைந்து விட்டன.

எனினும் தியாகிகளைத் துரோகிகளாகவும், துரோகிகளைத் தியாகிகளாகவும் சொல்லும்படி பெருந்தொகையான படித்த தமிழர்களைக் கிளிப்பிள்ளைகளாக்கிய பிரபாகரனுக்கு, ஏன் இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் தமிழர் கூட்டணிக்காரர்களையே கொண்டு அமிர்தலிங்கத்தைத் துரோகி எனவும் குமார் பொன்னம்பலத்தைத் தமிழர்களின் மாமனிதனெனவும் சொல்ல வைத்த பிரபாகரனுக்கு தமிழர்களின் நன்மைக்காக உருப்படியாக ஒரு காரியத்தைச் செய்ய முடியாதென்றில்லை.

(தொடர்ச்சி 02பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com



# சத்தியாக்கிரகம் பிறந்த வரலாறு

## கருத்து உறுதிப்பட்ட விதம் மகாத்மா காந்தி



பூஜ்யர் ஜோசப் டோக் மகாத்மா காந்தியின் வாழ்க்கைச் சரித்திரத்தை அவர் தென்னாபிரிக்காவிலிருந்த போதே எழுதினார். காந்திஜியைப் பொறுத்தவரையில் இந்தச் சத்தியாக்கிரகக் கொள்கை எவ்விதம் அவர் உள்ளத்தில் பிறந்தது, வளர்ந்தது என்பதைக் கூறும்படி ஸ்ரீ டோக் கேட்டார். இதற்குக் காந்திஜி கூறிய பதிலைக் குறித்து ஸ்ரீ டோக் கூறுவதாவது.

"நான் குழந்தையாகவிருந்த போது பள்ளிக்கூடத்தில் கற்ற குஜராத்திப் பாடல்களில் ஒன்று என் மனத்திலேயே எப்பொழுதுமிருந்து வந்தது. அதன் கருத்து வருமாறு.

**"தாகத்திற்கு நீர் கொடுத்தவருக்கு நீ திரும்ப நீர் கொடுத்து விடுவதில் பெரிது எதுவுமில்லை. ஆனால், தீமை செய்தவருக்கு நன்மை செய்வதிலேயே உண்மை பெருமை உண்டு."**

"குழந்தையாகயிருந்த காலத்திலேயே இப் பாட்டு என் மனத்தில் அதிக மாறுதலை உண்டாக்கியது, நடைமுறையில் அதன்படி நடக்க முயன்று வந்தேன். பிறகு ஏசுவின் மலை உபதேசங்கள் என் கவனத்திற்கு வந்தன" என்றார், காந்திஜி.

"ஆனால், நிச்சயமாகப் பகவத் கீதை அதற்கு முன்னால் உங்கள் மனதில் வந்திருக்கக்கூடும்" என்றேன். அதற்குக் காந்திஜி கூறியதாவது.

"இல்லை சமஸ்கிருதத்திலிருக்கும் பகவத் கீதையை நான் நன்றாகவே படித்திருக்கின்றேன். ஆனால் அதன் போதனைகளை நான் அந்த வகையில் பயின்றதில்லை. பைபிளின் புதிய சித்தாந்தமே உண்மையில், நியாயமாக நடப்பதில் எனக்கு விழிப்பை உண்டாக்கியதோடு சாத்வீக எதிர்ப்பின் மேன்மையை உணரும்படி செய்தது. மலை உபதேசத்தில் "தீயவனாயிருப்பவனை எதிர்க்காதே, உன்னை யாராவது வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டு" என்று கூறியிருந்ததையும், உன்னுடைய விரோதிகளிடமும் அன்பு செலுத்து, உன்னைத் துன்புறுத்திறவர்களும் பரலோகத்திலிருக்கும் என் பிதாவின் மக்களாக வேண்டுமென்று அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்" என்று சொல்லியிருப்பதையும் படித்துப் போரானந்தம் கொண்டேன். நான் கொஞ்சமும் எதிர்பாராத இடத்திலிருந்து என் கருத்துக்கள் உறுதி செய்யப்பட்டிருப்பதைக் கண்டு கொண்டேன்.

பகவத்கீதை என் எண்ணத்தை உறுதிப்படுத்தியது. டால்ஸ்டாயின் "உன்னுள்ளிருக்கும் கடவுளின் ராஜ்யம்" என்ற நூல் அதற்கு நிரந்தனமானதோர் உருவை அளித்தது.

"டால்ஸ்டாய், ரஸ்கின், தோரோ, இங்கிலாந்தில் நடந்த சாத்வீக எதிர்ப்பு இயக்கம். இவை உயர்ந்த சக்தியும் பற்றுதலும் உள்ள லட்சியப் படிப்பினைகளாக நிருபணமாகியிருக்கின்றன. என்னுடைய லட்சியம், தீமையை சாத்வீகத்தினால் எதிர்ப்பது என்பது மாத்திரமல்ல, தீமைக்குப் பதிலாக நன்மையே செய்வதென்பதையம் தீவிரமாகக் கொண்டது.

"சாத்வீக எதிர்ப்பு" என்று கூறப்படுவதை நான் விரம்பவில்லை. அதற்கு நான்கொண்டுள்ள பொருளை அது முழுவதும் வெளிப்படுத்தப் படுவதாயில்லை. அது ஒரு முறையை விவரிக்கிறது.

ஆனால் அது எந்த ஒரு முறையின் பகுதியாயிருக்கிறதோ அதன் கிராமத்தைப் பற்றியது இதில் எதுவுமில்லை. தீமைக்கு எதிராக நன்மையையே செய்துவிடுவது என்பதிலேயே உண்மையான அழகுயிருக்கிறது. அதுதான் என்னுடைய நோக்கம். என்றாலும் இச்சொற்களே இப்பொழுது எல்லோருக்கும் தெரிந்தவையாகவும் சுலபத்தில் புரியக்கூடியவையாகவும் இருப்பதோடு, என் மக்களில் பெரும்பாலானவர்கள் இச்சமயத்தில் இந்தக் கருத்தையே கொள்ளக்கூடியவர்களாயும் இருப்பதால் அதையே நான் மேற்கொள்கிறேன்.

குஜராத்திப் பாடலிலும், ஏசுவின் மலை உபதேசத்திலுமிருக்கும் கருத்து, வாழ்க்கை முழுவதையுமே அடியோடு மாற்றிவிட வேண்டும் என்பதே என் ஆர்வம்."

**நன்றி:- ஆறாந்திணை**

# சக்கடத்தார் - அம்மான் அரட்டை அரங்கம்

**இடம்:- வீரகாளியம்மன் கோவில் தேர் இருப்பிடத்திற்கு அருகில்**
**நேரம்:- பின்னேரம் 5 மணி**

**சக்கடத்தார்:-** அம்மான் வாங்கோ, வாங்கோ! மத்தியானம் எப்படிச் சாப்பாடு?

**அம்மான்:-** "அதையேன் கேக்கிறியள் மனுசிக்கும் மருமகளுக்கும் இடையில பெரிய சண்டை"

**சக்கடத்தார்:-** "மாமியார் மருமகள் சண்டை வழமையானதுதானே?"

**அம்மான்:-** "தொடக்கத்தில அப்படித்தான், ஆனா மருமகளுக்கு கனடாவிலிருந்து உண்டியல் வந்தாப்பிறகு இப்ப மோசமா போயிட்டு."

**சக்கடத்தார்:-** "மோசமான சண்டை என்டா ஆட்டிலெறி, பல்குழல் தாக்குதல் எல்லாம் இருக்குப் போல."

**அம்மான்:-** "ஓ உவள் அவ சமைச்ச ஆட்டிறைச்சியை தூக்கியெறிய அவ உவளை புட்டுக் குழலால அடிச்சுப் போட்டா."

**சக்கடத்தார்:-** "நீர் என்ன ஓய்! சமாதானம் பண்ணி வைக்க வேண்டியதுதானே"

**அம்மான்:-** "எனக்கு இதுவெல்லாம் பழகிப்போச்சு-சண்டையை வேடிக்கை பாக்கிறதே பழக்கமா போச்சு."

**சக்கடத்தார்:-** "அப்ப சமாதானம் பேச நோவெண்ண எரிச்சல் சொலமனை கூப்பிட வேண்டியதுதானே!"

**அம்மான்:-** "அவரும் உங்க அடிக்கடி வந்து ரகசியமா ரெண்டு போரோடையும் கதைக்கிறார் - ஆனா என்ன கேட்டா நோவெண்ணைக்காரன நம்பமாட்டன்-அவன் மருமகளின்ர மாமா கிட்னி வீரசிங்கத்தோட ஒட்டு.

**சக்கடத்தார்:-** "அப்ப எப்படியப்பா சமாளிக்கிறது?"

**அம்மான்:-** "ஏதோ பக்கத்து வீட்டு போதகர் இரண்டு பேரையும் கதைக்கச் சொல்லி வாலறுந்த பல்லிமாதிரி கத்தி கொண்டு திரியிறார்."

**சக்கடத்தார்:-** "ஓஹோ ஓஹோ எனக்கு விளங்குது விளங்குது. போதகர் மருமகளின்ர அப்பர் வேலுபிள்ளைக்கு நல்ல விசுவாசமானவர் தானே?"

**அம்மான்:-** "அது சரி கொழும்பில என்ன சேதி?"

**சக்கடத்தார்:-** "அது என்ன எந்த நேரம் போன் பண்ணினாலும் பொடியளுக்குச் சொல்ற மாதிரி" இப்ப நெரிசல் அப்ப சுழட்டுங்கோ" என்றுதான் சொல்லுயினம்.

**அம்மான்:-** "மடுமாதாவும் ஊர்வலம் போயிருக்கா"

**சக்கடத்தார்:-** "அதுசரி மகன் சரவணன் கொழும்பில என்ன செய்யிறான்?

**அம்மான்:-** "அவன் மச்சான்ர பினான்ஸ் கொம்பனி மூடினாப்பிறகு கலர் போட்டோ மச்சானோடயும் இந்தியாவில வீடு வித்தவையளோடும் சேர்ந்து புதிசா ஒரு பேப்பர் தொடங்கியிருக்கானாம்.

**சக்கடத்தார்:-** "அதுசரி பொதுமக்களின்ர காசில அவையளுக்கும் வாசிக்க ஏதாவது அடிச்சுக் குடுக்கத்தான் வேணும்.

**அம்மான்:-** அது சரி சக்கடத்தார் சமாதானம் வருமோ?

**சக்கடத்தார்:-** நீங்களும்தான் பேப்பர் படிக்கிறீங்க பிறகு என்ன?

**அம்மான்:-** பேப்பர்காறங்க ஒவ்வொண்டு ஒவ்வொண்டு சொல்லுறாங்க. டோனி பிளேயரோடும், ஜெர்மெனி, பிரான்சு நாட்டு ஜனாதியபதிமாரோடையும் கோல் போட்டு கதைச்சமாதிரி அது ஒரிஜினல் தடையில்லையாம் கொரியன்ட டுப்ளிகேட் தடையாம் என்டுதானே நியூஸ் போடுறாங்கள் ஒண்டுமா விளங்குதில்ல.

**சக்கடத்தார்:-** குளம் குட்டை குழம்பினபடியிருந்தா கன பேருக்கு வாசிதான்.

# குற்றவாளிகள் தண்டி........

01ம் பக்க தொடர்ச்சி

செய்யப்பட்டமை தற்போது நடைபெற்றது போன்ற பெண்களுக்கு எதிரான பல பாலியல் பலாத்கார படுகொலைகள் என பல குற்றச்செயல்கள் இழைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பலவுக்கு எந்த நீதி விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. அல்லது சர்வதேச உள்ளூர் நிர்ப்பந்தங்களுக்காக கண்துடைப்பு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலை மாணவி கிருஷாந்தி பாலியல் பலாத்கார படுகொலை தவிர வேறு எந்த குரூரசம்பவங்களுக்கும் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அண்மைக் காலத்தில் உரும்பிராய் ரஜனி, புங்குடுதீவு சாரதம்பாள், அம்பாறை கோணேஸ்வரி, பள்ளிமுனை ஜடா கமலிட்டா ஆகியோர் பாலியல் பலாத்கார படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

வெறும் காமவெறி மாத்திரம் இதில் சம்பந்தப்படவில்லை. சிங்கள மேலாதிக்கத்தின் விகாரமனோபாவத்தின் வெளிப்பாடே இது. இந்த மேலாதிக்கவெறி உணர்வுகளை கிளப்புவோர்களே இதற்குப் பொறுப்பாளிகள்.

இலங்கையின் சட்டங்களில் உள்ள ஓட்டைகள் இதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் தப்புவதற்கே இடமளிக்கின்றன. இது தமிழ்ப் பெண்களை பயங்கரவாதிகள் என்ற பேரில் கைது செய்து பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கி படுகொலை செய்வதற்கு வழிவகுத்துள்ளன.

சேர்பிய மேலாதிக்க வெறியர்கள் பொஸ்னிய முஸ்லீம் பெண்களுக்கு எதிராக இழைத்த கொடுமைகள் இன்று சர்வதேச நீதிமன்றத்தின் அவதானத்துக்குரியவை.

இலங்கை நாகரீகத்துக்கும், மரபு ரீதியாகப் பெறப்பட்ட மானிட விழுமியங்களுக்கும் மதிப்பளிக்கும் நாடாக இருந்தால் இத்தகைய கொடுரங்களில் ஈடுபடுபவர்கள் தப்பிவிட முடியாது.

மன்னாரில் நடந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தப்பிவிடாதபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இச்சம்பவத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் எதுவித தயவு தாட்சணியமுமின்றி தண்டனைக்குள்ளாக்கப்படும் நிலை உருவாக்கப்படல் வேண்டும். அப்போது தான் உண்மையான இன உறவுகளும், சட்டத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையும் ஏற்படும்.

இத்தகைய சம்பவங்களை எதிர்த்து மனித உரிமை அமைப்புக்கள், ஜனநாயக அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், மற்றும் தன்னார்வக்குழுக்கள் மக்களை ஈடுபடுத்தி தொடர்ந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும். அதன் மூலமே இத்தகைய சம்பவங்களைத் தொடராமல் தடுக்கமுடியும்.

# ஏகபிரதிநிதித்துவம் ஜனநாயக.......

01ம் பக்க தொடர்ச்சி

ஏகபிரதிநிதித்துவம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் உங்களது பிரதிநிதித்துவத்தை மக்களின் தெரிவை மறுக்கிறீர்களா? என்றும் வினா எழுப்பப்பட்டது.

வெவ்வேறு அபிப்பிராயங்களுடன் இந்த மாநகரசபையில் ஒரு ஒற்றுமை கட்டிக்காக்கப்படுகிறது. ஒரு அணியின் கருத்தை மற்றவர்கள் மேல் திணிக்கக்கூடாது.

ஜனநாயகமின்மை, பாதுகாப்பின்மை என பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் பணியாற்றும் நாம் இத்தகைய பிரேரணையைக் கொண்டு வருவது தேவையற்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து பிரேரணை கைவிடப்பட்டது.

### தந்தை செல்வா கொடுத்து வைத்தவர்

மார்ச் 31ம் திகதி யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வாவின் 103 வது பிறந்த தினமும், தந்தை செல்வா சதுக்கம் பெயர் சூட்டும் வைபவமும் நடைபெற்றது. இவ்வைபவத்தில் ஈ. பி.ஆர்.எல்.எப். மாநகரசபை உறுப்பினர் தோழர் சுபத்திரன் அவர்கள் உரையாற்றினார்.

தந்தை செல்வநாயகம் அவர்கள் மலையக மக்களின் வாக்குரிமை. பிரஜாவுரிமை பிரச்சினையில் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அந்தத் துரோக நடவடிக்கைக்கு உடந்தையாக இருந்தபோது பிரிந்து வந்து தமிழரசு கட்சியை உருவாக்கியவர். அவ்வாறு கருத்து மாறுபட்டு பிரிந்துவந்து இன்னுமொரு மிகப்பெரிய ஸ்தாபனத்தை உருவாக்கும் ஜனநாயக இடைவெளி அப்போது இருந்தது.

வரலாற்றில் முக்கியமான இரு ஒப்பந்தங்கள் பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் தமிழரின் தரப்பாக இருந்து தந்தை செல்வா கையெழுத்திட்டார்.

அவரின் வழிகாட்டலில் அரவணைப்பில் வளர்ந்த அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் துரோகி என்ற பட்டத்துடன் படுகொலை செய்யப்பட்டார். அமிர்தலிங்கம் காலத்தில் அவர் வாழ்ந்திருந்தால் அதே துயர முடிவுதான் தந்தை செல்வாவுக்கும் ஏற்பட்டிருக்கும் என்று தோழர் சுபத்திரன் குறிப்பிட்டார்.

# வாழ்த்துகிறோம் உலக அரங்கதினம்

மேற்கத்திய அரங்க நிபுணர்களும் அவைக்காற்றுகை சார்ந்த பல்வகை அறிக்கையாளர்களும் 1961ம் ஆண்டிற்கு முன்னரும் 1961 இல் ஹெல்சிங்கியிலும், வியன்னாவிலும் ஒன்றுகூடி உலக அரங்க தினமென்று நிறுவப்பட வேண்டும் என்ற கருத்தினை முன் வைத்திருந்தனர். இதன் விளைவாக 1961ம் ஆண்டு தொடக்கம் உலக அரங்க தினமாக உலகின் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் மூலம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தகைய பின்னணியிலேயே கிழக்குப் பல்கலைகழக நுண்கலைத் துறையும் 1994ம் ஆண்டிலிருந்து உலக அரங்க தினத்தைக் கொண்டாடியது.

இந்த வகையில் இவ்வருடம் 26.03.2001 தொடக்கம் 30.03.2001 திகதி வரை பல்வகை காத்திரமான நிகழ்வுகளை உள்ளடக்கி உலக அரங்க தினம் கொண்டாடப்பட்டது. மட்டு பல்கலைகழகச் சமூகத்தினர் இணைந்து நடாத்திய மாபெரும் நிகழ்வு இது.

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் கோரிக்கைகளும் தமிழர்களின் குழறுபடியான அரசியல் வரலாறும்

சென்ற இதழின் தொடர்ச்சி

## டட்லியின் அரசில் பங்குதாரர்கள்

1965ம் ஆண்டு டட்லி சேனநாயக்காவின் தலைமையில் அமைந்த ஐ.தே.கவின் அரசாங்கத்தில் பொன்னம்பலத்தின் காங்கிரஸோடு, தாங்களும் ஒரு பங்குதாரராகச் சேர்ந்து கொண்டனர். இந்த வேளையில் தாங்கள் தமிழ் மக்கள் மத்தியில் சூட்டரசியலைக் காப்பாற்றுவதற்கு தமிழரசுக் கட்சியினர் மிகப்பெரும்பாடுபட வேண்டி வந்தது. தேர்தல்வரை அரசாங்கத்தில் இருந்தால் தேர்தலை வெல்லுவது சங்கடமாகிவிடும் என்பதைக் கண்டு கொண்ட தமிழரசுக் கட்சியினர் ஒரு வருடம் முன்கூட்டியே திருகோணமலையைப் புனித நகராக்கவில்லை என்று சொல்லிக்கொண்டு அரசாங்கத்தை விட்டு வெளியேறி தமது சூட்டரசியலை மீளக் கொண்டுவர முயற்சித்தனர்.

எனினும், 1970ம் ஆண்டுத் தேர்தலில் இந்த அரசியலின் முன்னணி நபர்களான பீரங்கிப் பேச்சாளர் திரு அமிர்தலிங்கம், இரும்புத் தலையன் திரு நாகநாதன், மூச்சுவிடாப் பேச்சாளன் திரு. ஆலாலசுந்தரம் என முக்கியமானவர்கள் தோல்வி கண்டனர். இதேவேளை காங்கிரஸ் கட்சியிலும் தானைத்தலைவர் திரு பொன்னம்பலம், சிம்மக் குரலோன் திரு. சிவசிதம்பரம் ஆகியோரும் அந்தத் தேர்தலில் தோல்வி கண்டனர்.


டட்லி சேனநாயக்க

அத்தோடு பொன்னம்பலம் அரசியலை விட்டு மலேசியாவில் குடியேறினார். 1972ம் ஆண்டு தமிழரசுக் கட்சியும், தமிழ்க்காங்கிரஸும் இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி என உருவாகுவதற்கான சூழல் இந்த பெருந்தலைகளின் தோல்விகளாலேயே சாத்தியப்பட்டதெனலாம்.


திரு. செல்வநாயகம்

## 1957ல் பிரதேசசபை 1965ல் மாவட்ட அபிவிருத்திச்சபை 1972ல் வெறும் ஆறு அம்சக் கோரிக்கை

சமஷ்டி அரசியல் அமைப்புப் பற்றி தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் எந்தவகையிலும் திட்டவட்டமான நிலைப்பாடுகளை வெளியிடாதது மட்டுமல்லாது தமக்குள்ளேயும் ஒரு தெளிவான கருத்து நிலைப்பாட்டைக் கொண்டிருக்காததனால் அவ்வப்போது அரசியல் நிலைமைகளுக்கேற்ப செயற்படுகின்ற கட்சியாக மாறியது.

1957ம் ஆண்டு பண்டாரநாயக்காவுடன் பிரதேச சபைகளைப் பற்றி பேசியவர்கள், 1965ல் அதனைவிட பல வகையிலும் குறைவான மாவட்ட சபைகளை ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். 1972ல் சமஷ்டி சம்பந்தமாக ஏதுவுமேயில்லாமல் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தார்கள். எந்த ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திரு. செல்வநாயகம் காங்கேசன்துறை பா. உ பதவியை ராஜினாமாச் செய்தாரோ அதே தொகுதியில் மூன்றாண்டுகளுக்குள் நடைபெற்ற இடைத்தேர்தலின் போது "தமிழீழம்" பற்றிப் பேசினார்கள்.

1976ம் ஆண்டு "சுதந்திரமான இறைமை கொண்ட தமிழீழமே" தமது இலட்சிய குறிக்கோள் எனப் பிரகடனம் செய்து பெரும்பான்மையான தமிழ்ச்சனத்தை மகிழ்ச்சிப்படுத்தினர்கள். அது எவ்வாறு நடைமுறையாகும். அந்த தமிழரசுக் கட்சியின் அரசியல் என்பது காலப்போக்கில் ஒரு நேரான ஆக்கபூர்வமான அரசியல் போக்கை வளர்ப்பதற்கு மாறாக அதன் உறுப்பினர்கள் மத்தியிலும் ஆதரவாளர்கள் மத்தியிலும் ஒரு எதிர்மறையான அழிவுத் தன்மையான அரசியல் போக்கையே வளர்த்துவிட்டது.

தமிழர்களுக்கு எது வேண்டும், தமிழர்கள் என்ன அரசியல் குறிக்கோளுக்காக குரல் எழுப்ப வேண்டும், போராட வேண்டும், தமிழர்களுக்கு இலங்கையில் எவ்வாறானதொரு அரசியல் அமைப்பு நியாயத்தையும் பாதுகாப்பையும் தரும் என்கின்ற கேள்விகளுக்கு தெளிவையும் புரிதலையும் ஏற்படுத்துவதற்கு மாறாக தமிழரசுக் கட்சியின் அரசியலானது தமிழர்களை சிங்களவர்களுக்கு எதிராக சிந்திப்பதைத் தவிர சிங்கள மொழிக்கு எதிர், புத்த மதத்துக்கு எதிர், சிங்கள மக்களுக்கு எதிர் என்பதைத் தவிர ஆக்கப்பூர்வமான அறிவையோ சிந்தனையையோ உணர்வையோ அக்கட்சி வளர்த்துவிடவில்லை.

## இந்தியாவில் மாநில அமைப்பு இயல்பான அம்சம்

தமிழரசுக் கட்சியின் தலைவர்களான திரு செல்வநாயகம், வன்னியசிங்கம் போன்றவர்கள் மாகாண சபை அமைப்பு முறை ஒன்றை பெற்றுவிட வேண்டும் என்பதில் அக்கறையற்று இருந்தார்கள் என்று கூற முடியாது. 1957ம் ஆண்டு பண்டா-செல்வா ஒப்பந்தம் என்பது மாகாணசபை அமைப்பு முறையை ஏற்படுத்துவது பற்றிய ஒப்பந்தமேயாகும்.

இந்தியாவிலும் இதே சமகால கட்டத்தில்தான் அங்கு இருந்து வந்த பழைய மாகாணசபை அமைப்பு முறை மாற்றப்பட்டு புதிய மொழிவாரி மாநில அமைப்பு முறை உருவாக்கப்பட்டது. இந்தியாவில் மொழிவாரி மாநிலங்களை உருவாக்குவது சம்பந்தப்பட்ட கருத்தானது இந்தியத் தலைவர்கள் மத்தியில் 1930களிலேயே இருந்து வந்தது.


சிறிமாவோ பண்டாரநாயக்கா

ஜவர்கலால் நேரு போன்ற இந்தியத் தலைவர்கள் இந்திய அரசிலமைப்பை அவ்வாறு ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் இந்தியாவுக்கு நீண்டகால அடிப்படையில் நன்மையுண்டாகும் என தங்கள் சுயசிந்தனை மூலமாகவே செயற்பட்டார்கள்.

இதன் விளைவாக இந்தியாவில் மாநில அமைப்பு என்பது ஒரு இயல்பான அரசியல் அம்சமாக ஆகிவிட்டது. இந்திய சுதந்திரம் அடைந்த பொழுது திராவிட நாட்டுக் கோரிக்கை தனித் தமிழ்நாடு போன்ற பிரிவினைக் கோஷங்கள் நிலவி வந்தன.

ஆனால் இந்திய மாநில அமைப்பும் இந்திய ஜனநாயக அரசியல் செயற்பாடுகளும், இந்தியாவின் நிர்வாக முறைமையும் இவற்றுடன் இந்திய தேசப்பற்றும் ஒருங்கிணைந்து செயற்பட்டமையால் அன்று பிரிவினைக் கோசங்களைக் கொண்டிருந்த அதே தலைவர்கள் இன்று இந்தியாவிலிருந்து ஓரடி மண்ணும் விலகிவிடக்கூடாது என மூச்சப்பிடித்து குரல் எழுப்புகிறார்கள்.

இந்தியாவில் நடைமுறையில் இருக்கின்ற மாநில அமைப்பு முறையின் அதிகாரப்பகிர்வு விடயங்கள் இன்னமும் அதிருப்திகள் நிலவிக் கொண்டுதான் இருக்கின்றன. கோரிக்கைகள் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் அதற்காக அந்தத் தலைவர்கள் இருக்கின்ற அந்த மாநில அமைப்பை நிராகரித்துவிடவும் இல்லை. அதற்கு மாற்றாக பிரிவினை கோஷத்தை முன்வைக்கவும் இல்லை. தங்கள் மாநிலத்துக்கு என்னென்ன விடயங்களில் மேலதிகமாக என்னென்ன அதிகாரங்கள் வேண்டும் என்பதில் அவர்கள் தெளிவாகவே இருக்கிறார்கள் அவற்றை வெளிப்படையாகவும் முன்வைக்கிறார்கள்.

வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்று கூறி தனித்தமிழ் நாடு கேட்ட அதே திராவிட தலைவர்கள் இன்று காவேரி நீருக்காக கர்நாடகத் தலைவர்களுடன்தான் பேசுகிறார்கள். டெல்லியிலுள்ள மத்திய அரசு அதற்கு நியாயஸ்தம் வழங்க வேண்டுமென்று கூறுகிறார்கள்.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் தமிழர்கள் அல்லாதவர்களே பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் தண்ணீருக்காக கிருஷ்ணா நதி நீரை திறந்துவிடும்படி ஆந்திர அரசாங்கத்திடம் தமிழக அரசு கோரிக்கை விடுத்துக் கொண்டேயிருக்கிறது. இவ்வாறெல்லாம் இருப்பினும் இலங்கையில் பிரபாகரனின் தலைமையில் தமிழீழம் மலர வேண்டும். தமிழர்களுக்கென்று ஒரு தனிநாடு உருவாக வேண்டும் என்றெல்லாம் ஆசைபடுகின்ற வை. கோபால்சாமி கூட இந்தியாவிலிருந்து காஷ்மீர் பிரிவதை அனுமதிக்க முடியாதென்றும், தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பாகமாக இருப்பதில்தான் தாங்கள் பெருமைபடுவதாகவும் கூறிக் கொள்கிறார்கள். இவ்வாறானதொரு நிலைமையை கடந்த 50 ஆண்டுகளில் ஏற்படுத்தியமை இந்திய அரசியல் அமைப்பின் வெற்றியென்றே கூறுதல் வேண்டும்.


திரு. அண்ணாத்துரை

அடுத்த இதழில் தொடரும்

---

## நூல் நயம் காண்போம்.

**ஆசிரியம்**
**மலர் ஆசிரியர் - கலாநிதி நா. அமிர்தலிங்கம்**
**பட்டபின் கல்வி டிப்ளோமா, மாணவர் அமைப்பு, தேசிய கல்வி நிறுவகம். யாழ் இந்து மகளிர் கல்லூரி பங்குனி 2001.**




யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தேசிய கல்வி நிறுவக பட்டபின் கல்வி தேர்வு பயிற்சியை மேற்கொள்ளும் 2ம் வருட மாணவர்கள் (2001) ஆசிரியம் என்னும் சஞ்சிகையை வெளியிட்டுள்ளனர். முதலாவது சஞ்சிகை 1995இல் வெளியிடப்பட்டது.

2வது சஞ்சிகை கல்வித்துறையில் துறை தோய்ந்த அறிஞர்களதும், அனுபவமிக்க ஆசிரியர், மாணவர்களதும் கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கி வெளிவந்திருக்கின்றது.

கலாநிதி சபா. ஜெயராசா பின்நவீனத்துவம் தொடர்பான ஒரு கட்டுரையை வரைந்துள்ளார்.

கலை இலக்கியத்தில் தோற்றம் பெற்ற இந்த பின் நவீனத்துவக் கோட்பாடு, சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம் என சகல துறைகளிலும் தற்போது ஊடுருவி நிற்பதனையும் பூகோளமயமாக்கலுக்கான கருத்தியலாக அது இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வியும் தேடலும் என்ற பகுதி பின் நவீனத்துவக் கோட்பாட்டின்படி "இயல்பானது, சரியானது, பொதுவானது என நம்பப்படுகின்றவற்றை பரிசீலனை செய்வதற்கு கல்வி கைகொடுத்தல் வேண்டும். காலம், இடம், கட்டளைகள் அனைத்தும் நிறியவண்ணம் உள்ளது. அவற் றை அடியொற்றிய நிறியவண்ணங்கள் மாறியவண்ணம் உள்ளன.

இந்நிலையில் மாற்றமடையாத நடுவம் அல்லது மையம் என்பதை பரிசீலிக்க வேண்டியுள்ளது. மாற்றமடையாது காலத்தையும் இடத்தையும் கடந்து அவை செல்கின்றன என்பதை பின் நவீனத்துவவாதிகள் நிராகரிக்கின்றர்.

தணிகாசலம்பிள்ளை, சண்முகநாதன் ஆகிய விரிவுரையாளர்கள் எழுதிய கட்டுரைகளில் பாடசாலைகளின் அதிகாரம் பறிக்கப்பட்டிருப்பதும் ஆசிரியர்களின் கற்றற் செயற்பாடு குறைந் திருப்பதும், ஆசிரிய மாணவ உறவுகள் ஆரோக்கியமற்று இருப்பதும், அதிபர், ஆசிரியர்களின் உறவுகள் பறிக்கப்பட்டிருப்பதும், பாடசாலையின் வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படாமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கல்வி வியாபாரமாக்கப்பட்டிருப்பதும் ஒரு மையவாத செயற்பாட்டால் தேக்கமடைந்திருப்பதும் பரவலாக கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விஞ்ஞானக் கல்வியும் விழுமியங்களும் இணைப்பாடவிதானங்களின் முக்கியத்துவம், சமூகம், கல்வி, மாணவர் பெற்றோருக்கிடையிலான உறவுகள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

கல்வி அதிகாரப் பகிர்வின் அவசியம் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

கல்விக்குரிய வளங்கள், ஆதாரங்கள் பற்றாக்குறையாக இருக்கும் யுத்த பூமியான வடக்கு கிழக்கு சூழலில் ஆசிரியம் ஒரு சிறந்த தேடல் முயற்சி.

**கலைஞானியும் கலைத் தொண்டும்**
**பத்திரிகை நறுக்குகளின் தொகுப்பு**
**தொகுப்பாசிரியர் - எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**
**வெளியீடு - மாமனிதர் கலைஞானி கலாலயம் குரும்பசிட்டி.**




கலைஞானி அ. செல்வரத்தினத்தின் அரும்பொருட் சேகரங்களைப் பற்றியும் ஆவணங்கள் பத்திரிகைகள் பற்றியும் கடந்த 50 வருடங்களில் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள், குறிப்புக்கள், செவ்விகள் யாவற்றையும் சேகரித்து எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி அவர்கள் கலைஞானியும் கலைத்தொண்டும் என்ற பெயரில் நூலொன்றை வெளியிட்டுள்ளார்.

எம் சமகால சந்ததியினருக்கும், வருங்கால சந்ததியினருக்கும் அத்தியாவசியமான நூல் இது. தொல்பொருளியல் ஆதாரங்களை வைத்து வரலாற்றை ஆராயும் நவீன முறையை 50 வருடங்களுக்கு முன்னரே ஆரம்பித்தவர் கலைஞானி. பேராசிரியர்கள் இந்திரபாலா, ரகுபதி, தென்னிந்திய பேராசியர் நாகசாமி ஆகிய நவீன வரலாற்று ஆய்வாளர்கள் தாம் சார்ந்த நிறுவனங்களுடாக மேற்கொண்ட பணியை தனியொரு மனிதனாக நின்று மேற்கொண்டவர் அவர்.

தொல்லியல் துறைக்கு தன்னை அர்ப்பணித்த கலைஞானி (68) தனது குரும்பசிட்டி வாழ்விடத்தைவிட்டு இடம் பெயர்ந்த பின்னும் யாழ் பரமேஸ்வரா சந்தியில் இன்றும் இந்த வரலாற்றுச் சின்னங்கள் நடுவே வாழ்ந்து வருகிறார். வரலாற்றுணர்வில்லாத எமது தலைமுறையினரையிட்டு அவர் ஆழ்ந்த துக்கம் கொண்டுள்ளார்.

இந்த நூலை வாசிக்கும் போது ஒரு பாரிய அதிர்வு எமது மனதை தாக்குகிறது. தனி மனிதனின் வியத்தகு சாதனை இத்தகைய மனிதர்களின் சாதனைகளும்தான் எம் சமூகத்தின் ஆற்றலை உலகுக்கு பறைசாற்றுகிறது.

கலைஞானியின் சேகரங்களை வாங்குவதற்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆர்வமுள்ளோர் முனைந்தபோதும் அவர் டொலர்களுக்காக அவற்றை கைமாற்றவில்லை. அவரின் சேகரங்கள் பல யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்து விட்டன. இத்தகைய மனிதர்களின் பணி சரியாக மதிப்பிடப்பட்டு அதன் பயன்பாட்டை சமூகத்துக்குக் கிட்டச் செய்ய வேண்டும். வரலாற்றுக்காக தன்னை அர்ப்பணித்த அந்த மனிதனுக்கு உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும்.

படிப்பகம

www.padippakam.com



# ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் மதிக்காத போராட்டம் அதற்கான விலையைச் செலுத்துகிறது

புலிகள் இயக்கம் மீதான தடை பிரித்தானிய பாராளுமன்றத்திலும், பிரபுக்கள் சபையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தியாவும் அமெரிக்காவும் தடைவிதித்திருக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் கனடா அவுஸ்திரேலியா என தடை விஸ்தரிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன.

இத்தகைய தடை ஏற்படுவதற்கான காரணிகள் எவை இந்த நிலை தோன்றுவதற்கான சூழ்நிலை எவ்வாறு உருவாக்கப்பட்டது?

### விடுதலைப் போராட்டத்தின் குணங்குறிகள் இருந்தனவா?

எந்த ஒரு விடுதலைப்போராட்டத்திலும் போராடும் தளத்தில் உள்ள மக்களின் ஆதரவு, அந்த நாட்டின் ஏனைய மக்கள் பிரிவினர், சர்வதேச சமூகத்தின் ஆதரவு என்ற மூன்று அம்சங்கள் மிகமிக முக்கியமானவை.

போராடும் இயக்கம் ஜனநாயக உணர்வு கொண்டதாகவும், மக்கள் மேல் அளவு கடந்த நேசம் கொண்டதாகவும் இருக்கவேண்டும். மேலதிகமாக போராடும் சமூகத்தின் இயக்கங்கள் இடையே ஐக்கியம் கட்டிக் காக்கப்படவேண்டும்.

சமகாலத்தின் பிரபல போராட்டக்காரர்களான பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத், ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலா, பர்மிய ஜனநாயக இயக்கத்தின் தலைவி அங்சாங்சூகி போன்றவர்கள் உலகினால் அங்கீகரிக்கப்பட்ட மாபெரும் தலைவர்களாக வருவதற்கு இத்தகைய குணாதிசயங்கள் அடிப்படையாக இருந்தன.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடமோ அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடமோ இத்தகைய குணங்குறிகள் இருந்தனவா என்பதே எம்முன்னுள்ள கேள்வி.





இந்த கேள்விக்கான பதிலிலிருந்து தற்போதைய நிலவரங்களுக்கான காரணங்களை நாம் கண்டறிய முடியும்.

### கனவுகள் நம்பிக்கைகளுடன் ஆரம்பித்த போராட்டம்

இற்றைக்கு 20வருடங்களுக்கு முன்னர் தேசியம் கலந்த சமூக விழிப்புணர்வுடன் வடக்கு கிழக்கில் தோன்றிய பல்வேறு இயக்கங்களிலும் இளைஞர்களும் யுவதிகளும் அணிதிரள தொடங்கினார்கள். சமூக வேலைகளுடன் கற்றல் செயற்பாடுகளும் இடம் பெற்றன.

பெருமளவு மார்க்சிய நூல்களும், சர்வதேச விடுதலை இயக்கங்களின் வரலாறும், அனுபவங்களும், முற்போக்கு இலக்கியங்களும் கற்கப்பட்டன. அவை பற்றிய வாதப்பிரதிவாதங்கள் பல்கலைக்கழகத்திலிருந்து சாதாரண கிராம மக்கள் வரை பல்வேறு தளங்களில் விவாதிக்கப்பட்டன.

தமிழ் மக்களின் தேசிய விடுதலையுடன் சாதி ஒடுக்கு முறை, பெண் அடிமைத்தனம், சுரண்டல் சமுதாய அமைப்பு, சாதாரண சிங்கள, முஸ்லீம், மலையக மக்களுடனான உறவு எல்லாமே கரிசனைக்குரியனவாக இருந்தன.

கிராமத்து கூலி விவசாயிகளின் போராட்டங்களிலிருந்து பேரினவாதக் கைதுகள் சித்திரவதைகள் கலாச்சாரப் படுகொலைகளுக்கெதிராகவும், இனரீதியான அநீதிகள், அரசியல் அடக்கு முறைகளுக்கு எதிராகவும் இயக்கங்கள் நடத்தப்பட்டன. சில விதிவிலக்குகள் இருந்தாலும் ஒரு ஆரோக்கியமான அரசியல் சூழல் உருவாகிக்கொண்டிருந்தது. புதிய தலைமைத்துவம் ஒன்று தோன்றிக் கொண்டிருந்தது.

### குறுகிய காலத்தில் பெறப்பட்ட மிகப்பெரிய சர்வதேச ஆதரவு

சர்வதேச அளவில் இந்தியா இன அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் மக்களுக்கு தனது நேசக்கரத்தை நீட்டியிருந்தது. இந்தியா ஈழத் தமிழர்களுக்கும், தமிழ் போராளிகளுக்கும் சுதந்திரமாக செயற்படுவதற்கான ஒரு பின்தளமாகவே அமைந்திருந்தது.

அன்றைய இந்தியா பலஸ்தீனத்திற்கும், ஆபிரிக்காவின் விடுதலை எழுச்சிகளுக்கும், தீவிரமாக ஆதரவு அளித்துக்கொண்டிருந்த காலம் சோவியத் யூனியன் சிதறுண்டுபோகாமல் இருந்த காலம்.

இந்திரா காந்தி தலைமையிலான இந்தியாதான் ஈழத்தமிழர்களுக்கான நியாயங்களை உலகுக்கு முன்னெடுத்துச் சென்றது. அக்காலத்தில் அவ்வளவு குறுகிய நாட்களில் ஈழத் தமிழர்களுக்கான ஆதரவு சர்வதேச அளவில் விஸ்தரித்தது பலருக்கு ஆச்சரியத்தை கொடுத்தது.

போடப்பட்ட அடித்தளமும், முளைவிட்ட பயிர்களும் நன்றாகத்தான் இருந்தன. கருத்து வேறுபாடுகள் விவாதங்கள், கலந்துரையாடல்கள் போன்ற முறைகளில் தீர்க்கக்கூடிய சாத்தியங்கள் இருந்தன.

### கனவுகள் சிதறிய சகோதரப் படுகொலைகள்

ஆனால் எதிர்காலத்தில் எல்லாம் நிர்மூலமாகப் போகின்றன, உள்ளிருந்தே கொல்லும் வியாதி ஒன்று உருவாகிக்கொண்டிருக்கிறது, என்பதை பலர் உணரவில்லை. சாடைமாடையாக அது தென்பட்டாலும் காலப்போக்கில் அந்த வியாதி இல்லாமல் போகுமென்றே பலரும் கருதினார்கள்.

புதிய பாதை பத்திரிகை ஆசிரியர் சிவசண்முக மூர்த்தி-சுந்தரம் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட போது (அப்போது பிரபலமாகத் தெரிந்த ஒரு சகோதரப்படுகொலை. யாழ் வெலிங்டன் தியேட்டருக்கு அண்மையில் இருந்த சித்திரா அச்சக வாசலில் வைத்து இவர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.) நம்பிக்கைகள் தகர ஆரம்பித்தன. இறைகுமாரன். உமைகுமாரன் என இருவர் இவர்கள் இளைஞர் பேரவை முக்கியஸ்தர்கள். அளவெட்டியில் உள்ள வீடொன்றில் வைத்து புளொட் இயக்கத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

ஆனால் புலிகளின் படுகொலைக் கரங்கள் நீண்டன அகல விரிந்தன. யாழ் பரியோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராசா. நவசமசமாஜ கட்சியின் முக்கியஸ்தர் தோழர் அண்ணாமலை, இலங்கை கம்யூனிசக்கட்சியின் அன்றைய யாழ் மாவட்ட செயலாளர் விஜயானந்தன், சர்வோதய இயக்கத்தின் யாழ் மாவட்ட அமைப்பாளர் திருநாவுக்கரசு (இவர் பாலக்குமார் ஈரோஸ் இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்டார்.) நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தைச் சேர்ந்த கந்தசாமி, (ஈரோஸ் இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்டார்) தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினர்களான உடுவில் தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் (இவர்கள் ரெலோ இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.)

மட்டக்களப்பைச் சேர்ந்த யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் மருத்துவ பீட பேராசிரியையும் முறிந்த பனை ஆசிரியர்களில் ஒருவருமான ரஜனி திரணகம, தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் வரையிலான பல நூற்றுக்கணக்கான புத்திஜீவிகள், அரசியலாளர்கள், மாணவர்கள், மனித உரிமையாளர்கள், அரசாங்க அதிகாரிகள் என பல தரத்தோரும் படுகொலை செய்யப்பட்டனர்.

அது இன்றும் சகல தார்மீக மானிட நெறிமுறைகளுக்கப்பால் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

1986 முற்பகுதி தொடக்கம் இறுதிப்பகுதி வரை தமிழர்களின் விடிவுக்காக போராடப்புறப்பட்ட இயக்கங்கள் ஒவ்வொன்றாக அழித்தொழிக்கும் படலம் நடைபெற்றது. தாம் பிறந்த சமூகத்தின் விடுதலைக்காக தன்னெழுச்சியாக போராடப்புறப்பட்ட இளைஞர்கள் சுடப்பட்டு வீதி வீதியாக எரிக்கப்பட்டார்கள். புலிகள் இந்தப்படுபாதகச் செயலை மேற்கொண்ட போது சிலர் குளிர்பானம் உடைத்துக்கொடுத்து இந்த கொடுச்செயலை ஆதரித்தார்கள்.

ரெலோ இயக்கத்தின் சாதாரண ஊழியர்களிலிருந்து அதன் தலைவர் சிறிசபாரட்ணம் வரை படுகொலை செய்யப்பட்டனர். ரெலோ இயக்கம் மக்களிடம் கொள்ளையடித்த பொருட்கள் என சில பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. (இதனைச் செய்த புலிகள் 1995ல் சூரிய கதிர் நடவடிக்கையின் போது வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் சொத்துக்களை அபகரித்ததும், ஆனையிறவுச் சண்டையின் பின்னர். தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் சொத்துக்களை கபளீகரம் செய்ததும் ஊரறிந்த வெட்ட வெளிச்சமான உண்மை.

பின்னர் புளொட், என்.எல்.ரி., பி.எல்.எவ்.ரீ., இறுதியாக டிசம்பரில் ஈ.பி.ஆர்.எல்.எவ் வையும் தடை செய்தார்கள். தமது தடுப்புக்காவலில் இருந்த 53தமிழ் போராளிகளையும் புலிகள் படுகொலை செய்தார்கள். பல நூற்றுக்கணக்கான போராளிகளை இந்த தடைசெய்தல் நடவடிக்கையின் போது கொன்று தள்ளினார்கள்.

அன்றைய ஜெ.ஆர். தலைமையிலான சிங்களப்பேரினவாத அரசையே தோற்கடிக்கும் விதத்தில் இவர்கள் மனிதப்படுகொலைகளை மேற்கொண்டார்கள்.

### மக்களின் நம்பிக்கைகள் தவிடு பொடியாகின

"எங்கட பொடியன்கள் விடமாட்டாங்கள்" என்று இறும்பூதெய்தியிருந்த தமிழ் மக்கள் மத்தியில் இந்தப் படுகொலைகளும், தடைகளும் சகல நம்பிக்கைகளையும் தவிடுபொடியாக்கின. தமிழர்களின் நியாயங்கள் போராட்டங்கள் தொடர்பாக உலகத்திற்கு இருந்த நம்பிக்கைகளும் இப் படுகொலைகள் மூலம் தகர்க்கப்பட்டன.

### திம்பு கோரிக்கைகளின் பூர்வீகம்

1985இன் நடுப்பகுதியில் இயக்கங்கள் பெயரளவிலேனும் ஒற்றுமையாக இருந்த காலத்தில் திம்புக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. திம்புக்கோரிக்கை என்னும் போது அதனை சிறிது விளக்கவேண்டும். ஈழப்போராட்ட இயக்கங்களின் அழுத்தம் காரணமாகவும் ஒற்றுமையின் காரணமாகவும் இந்தியாவின் செல்வாக்கில் இலங்கை அரசின் பிரதிநிதிகள் பூட்டானின் தலைநகர் திம்புவில் தமிழ் இயக்கங்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போதுதான் அந்தப் பிரபலமான திம்புக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அந்தக்கோரிக்கைகள் புலிகளின் கோரிக்கைகள் அல்ல அவை ஈ.என்.எல்.எவ் என்ற பெயரில் ஐக்கியப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, ஈரோஸ், எல்.ரி.ரி.ஈ ஆகிய இயக்கங்களினதும் புளொட்., தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியவற்றினதும் கோரிக்கைகளாகும் இந்தக்கோரிக்கைகளை உருவாக்குவதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரதிநிதிகளின் பங்களிப்பு கலந்துகொண்ட அத்தனை பேருக்கும் தெரியும்.

ஐக்கிய முன்னணியில் இருந்து கொண்டே புலிகள் சகோதரப்படுகொலைகளில் ஈடுபட்டார்கள்.

பின்னர் 1986 பிற்பகுதியில் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இந்தக் கோரிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன.

ஆனால் தற்போது இந்தக் கோரிக்கைகளின் பூர்வீகம் தெரியாத தமிழ் பத்திரிகைகளும், தமிழர் போராட்டத்துடன் தொடர்ச்சியாக சம்பந்தப்படாத காலஞ்சென்ற, தற்போது உயிர் வாழும் அரசியல் வாதிகளும் ஏதோ புலிகள் முன்வைத்த கோரிக்கைகள் திம்புக்கோரிக்கைகள் என்று கூறித்திரிகிறார்கள் இவர்களுக்கு திம்புக்கோரிக்கைகள் எவை என்று கேட்டால் கூறத்தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

புலிகளின் பாசிச நிழல் தமிழ் நிலங்களில் அகல விரிந்து அதனை இருட்டாக்கியது மாற்றுக்கருத்துக்களுக்கோ, மாற்றுச்செயற்பாடுகளுக்கோ இங்கு இடமற்றுப்போனது. அவநம்பிக்கையும் வெறுமையும், சிதைவுகளும் ஏற்பட்ட சூழலில்தான் 1987ல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் மீண்டும் முக்கியத்துவம் பெறுகிறது.

### இந்தியாவுடன் பகை- பிரேமதாசாவுடன் கூட்டு

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான போது அதனை முதலில் ஆதரித்து அறிக்கை விட்டவர்கள் புலிகள் அணிசேரா இயக்கம் பற்றியும் ஜவகர்லால் நேருவின் தலைமைப்பாத்திரம்பற்றியும் பிரபாகரன் ஓர் உரையில் சிலாகித்திருந்தார்.

ஆனால் மிகவும் அபகீர்த்தி வாய்ந்த ஒரு யுத்தத்தை இந்திய இலங்கை ஒப்பந்தம் அமுல்படுத்தப்படுவதை கண்காணிக்க வந்த இந்திய அமைதிகாக்கும் படையுடன் தொடுத்தார். தார்மீக ரீதியிலும், தந்திரோபாய ரீதியிலும் இது மிக மிக மோசமான செயலாகவே அமைந்திருந்தது.

இத்தகைய ஓர் சூழ்நிலையில் தான் இயலுமான வரை தமிழ் முஸ்லீம் சக்திகளை ஐக்கியப்படுத்தி இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண அரசை உருவாக்குவதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கியது.

தனது ஆதிக்க நிலை என்பதைத்தவிர தமிழ் மக்களின் நலன் சார்ந்த கொள்கைகள் எதுவும் எல்.ரி.ரி.ஈ யிடம் இருக்கவில்லை என்பது அப்போது வெளிப்பட்டது.

இந்தியாவுடனும் மாகாண அரசை ஏற்றுச்செயற்பட்ட இயக்கங்கள்,

www.padippakam.com



தி. சிறி



அரசியல் கட்சிகள் மீதும் பகைமை பாராட்டி பிரேமதாசா அரசுடன் கூட்டுச் சேர்ந்தனர்.

தமிழ் மக்களின் வரலாற்றில் வெட்ககரமான கறைபடிந்த அத்தியாயம் இதுவாகும். தமிழர்களின் நண்பனாக வந்த இந்தியாவை விரோதித்து பேரினவாத அரசுடன் கரம் கோர்த்தனர். தமிழ் மக்களின் விடிவிற்காக 35வருடம் தன்னலமற்று ஆளுமையுடன் உழைத்த த.வி.கூ செயலதிபர் அமிர்தலிங்கம் அவர்களை படுகொலை செய்தார்கள்.

இங்கு புலிகளின் போராட்டத்தின் நேர்மையீனம், சந்தேகத்துக்கிடமான தன்மை தெளிவாக புலப்படுகிறது.

அப்போது பிரித்தானிய தூதுவராக கடமையாற்றிய முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் துணையுடனேயே ஸ்கன்டிநேவிய நாடொன்றில் இருந்த பிரபாகரனின் மனைவி பிள்ளைகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டு வன்னிக்கு அனுப்பப்பட்டார்கள்.

தமிழர்களின் விடுதலைக்காக உழைத்த அமிர்தலிங்கம் அவர்கள் துரோகப் பட்டத்துடன் மரணம். பிரபாகரனின் குடும்பத்தவர்கள் பாதுகாப்புடன் வன்னிக்கு அனுப்பி வைப்பு. இது வரலாற்றின் முரண் நகை.

இந்திய-இலங்கை ஒப்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாணசபையை நிர்மூலமாக்குவதிலும், மாற்று இயக்கப்போராளிகளை படுகொலை செய்வதிலும் இந்திய அமைதிகாப்புப்படையினருக்கு அழிவையும் அவமானத்தையும் ஏற்படுத்தும் விதத்தில் பிரேமதாசாவுடன் சேர்ந்து மாகாண அரசை கலைக்குமாறும் இந்திய படையை வெளியேறுமாறும் குரல் எழுப்பினர்.

### முஸ்லீம் மக்களின் பலாத்காரமான வெளியேற்றம்

இந்தியப் படை வெளியேறிய கையோடு மாற்று இயக்கங்களுக்கு ஆதரவு அளித்தவர்கள் அவற்றில் அங்கத்தவர்களாக இருந்தவர்கள் பலநூற்றுக்கணக்கானவர்களை புலிகள் படுகொலைசெய்தனர்.

வடக்கு கிழக்கில் மண்ணுடன் ஒட்டிவாழ்ந்த முஸ்லீம் மக்களை வேருடன் பிடுங்கி வெளியே எறிந்தார்கள்.

இந்திய மண்ணில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் நாயகம் பத்மநாபா அவர்களையும் 12 மூத்த உறுப்பினர்களையும் படுகொலை செய்தார்கள். அதனோடு நிற்கவில்லை. இந்தியாவின் கீர்த்திவாய்ந்த பிரதமர் புகழ் பூத்த குடும்பத்தின் வாரிசு ராஜீவ் காந்தி அவர்களை தற்கொலை குண்டுதாரியை ஏவி படுகொலை செய்தார்கள்.

ஈழத்தமிழர்கள் மீதிருந்த கொஞ்சநஞ்ச அனுதாபமும் இல்லாதொழிக்கப்பட்டது. புலிகளுக்கு ஆதரவான எவரும் தமிழக, இந்திய அரசியலில் செல்வாக்கு செலுத்த முடியாது என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டது.

தொடர்ந்து கொழும்பிலும், எல்லை பிரதேசங்களிலும் சாதாரண மக்களை இலக்காக வைத்து நடத்தப்பட்ட படுகொலை தாக்குதல்கள் சர்வதேச சமூகத்தை அதிர்ச்சியடைய வைத்தது. பொருளாதார இலக்குகள் மீது தாக்குதல், துரோகிகள் மீது தாக்குதல்கள் என்ற பேரில் இவை சன நெரிசல் நிறைந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன.


எல்லைக் கிராமங்களில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என்ற விவஸ்தையின்றி பலர் படுகொலை செய்யப்பட்டனர். ஒரு "படுகொலை மேனியா" என மனம் பேதலிக்கும்படி இக்கொலைகள் நடந்தேறின.

சிறீலங்கா பேரினவாத அரசின் சிறைப்படுகொலைகளையும் சிவிலியன்கள் மீதான விமான குண்டு வீச்சுக்களையும் விஞ்சி நின்றன இத்தாக்குதல்கள்.

விளைவு தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் அடிபட்டு போய் தமிழ் பயங்கரவாதம் என்பதே வெளியுலகுக்கு பெரிதாக தெரியும் சூழ்நிலை உருவாகியது.

### வன்முறைமீது காதல் கொண்ட மனநோயாளர்கள் என்ற பட்டம் தமிழர்களுக்கு

நூல் நிலையம் எரிக்கப்பட்ட போது. அடுத்தடுத்து தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட இன வன்முறைகளின் போது தமிழ் மக்களின்பால் இருந்த் அனுதாபம், மாறி இன்று தமிழர்களை வன்முறை மீது காதல் கொண்ட மனநோயாளர்கள் என்ற மாதிரியான நிலையை தோற்றுவித்துள்ளது. இந்த நிலை நாகரீகமான சாதாரண சராசரி பெரும்பான்மை தமிழர்களையும் பாதித்துள்ளது.



இன்று இந்த நாட்டில் மாத்திரமல்ல உலகம் முழுவதும் தமிழர்கள் மேல் ஒரு கண்காணிப்பு கவிந்திருப்பதற்குக் காரணம் இந்த வன்முறையே. இந்த நாடு, அண்டை நாடு உட்பட பல நாடுகளில் தமிழர்கள் அனுபவிக்கும் அன்றாட அசௌகரியங்களுக்குக் காரணம் இந்த பயங்கரவாதமே.

தமிழர்களுக்கு உலகத்திலும் உள்நாட்டிலும் உருவாகிவந்த சாதகமான அம்சங்கள் எல்லாம் புலிகளின் நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டன.

### அவர்கள் எதையெல்லாம் அழித்தார்கள்

அவர்கள் சொந்த சகோதர இயக்கங்களை அழித்துள்ளார்கள்!

சொந்த சகோதர இனத்தின் வாழ்வை அழித்தார்கள்!

அண்டை நாட்டு நண்பர்களுக்கு கேடு விளைவித்தார்கள்!

எம்மை ஆதரிக்கக்கூடிய பெரும்பான்மை மக்களுக்கு உயிர்ச்சேதம் விளைவித்தார்கள்!

தமிழர்களுக்கு உருவாகி சாதகமாக வந்த தீர்வுகள் அனைத்தையும் அம்சங்கள் நிர்மூலம் செய்தார்கள்!

சொந்த சமூகத்தில் கீர்த்திவாய்ந்த தலைவர்களையும், அறிவு ஜீவிகளையும், மாற்றுக் கருத்துக் கொண்டோரையும் அழித்தார்கள்!

விவாதத்திற்கான, மாற்றுக் கருத்துக்கான களத்தை அழித்தார்கள்!

மனிதர்கள் எவரும் வாழ விரும்பாத சூழலை உருவாக்கினார்கள்!

கண்ணி வெடிகள் புதையுண்ட, முடவர்களையும், விதவைகளையும் கொண்ட தேசத்தை உருவாக்கினார்கள்!

யாழ்ப்பாணத்தின் தென்மராட்சியிலும், மன்னார் பெருநிலப்பரப்பிலும், வவுனியா யாழ், நெடுஞ்சாலையிலும், மட்டக்களப்பின் புளியந்தீவு முதல் வாழைச்சேனை வரையிலான இன்னும் எண்ணற்ற குக்கிராமங்களிலும் வாழ்க்கை நரகமாகிவிட்டது.

மக்கள் மௌனமாக மந்தைகளாக நடக்க பழக்கப்பட்டுள்ளார்கள். தமிழ் பத்திரிகையாளர்கள் என்ற பெயரிலும், தமிழ் அரசியல்வாதிகள் என்ற பெயரிலும் அழிவுகளை கருத்திற்கெடுக்காத வல்லமை மிக்கவற்றுக்கு அடிபணியும் பொய்மையில் வாழும் ஒரு கூட்டம் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறது. இவர்கள் உருவாக்கிய தவறான பிரதிபிம்பங்கள்தான் இன்றைய நிலைக்கு பங்களத்திருக்கின்றன.

### அநாகரிகமான வன்முறைகளை எதிர்காலம் ஏற்றுக் கொள்ளாது

மனிதகுலம் பல ஆயிரம் ஆண்டுகள் கடந்து பூமிப்பந்தில் வாழ்ந்து வருகிறது. அதன் வளர்ச்சியில் வன்முறைகள் தலையெடுத்தாலும் காலாதிகாலமாக மனிதாபிமான கருத்துக்கள் வளர்ச்சியடைந்தே வந்திருக்கின்றன.

இன்று "உலகக் கிராமம்" பற்றி பேசப்படுகிறது. மனிதர்கள் தமக்கிடையே சினேகபூர்வமாக வாழவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. இனங்களுக்கும் பல்வேறு சமூகக் குழுக்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதும் ஐக்கியமாக வாழ்வதும் வலியுறுத்தப்படுகிறது.

எனவே அநாகரிகமான வன்முறைகள் இனிவரும் உலகில் ஏற்றுக் கொள்ளப்படாது என்ற யதார்த்தத்தை விளங்காதவர்கள் வெற்றியாளர்கள் அல்ல.

சீனாவும், கியூபாவும், வியட்நாமும் சமகாலத்தில் போராட்டங்களை நடத்தின. அவை மனித குலத்தின் மீது கொண்ட அன்பினாலும், சுரண்டலற்ற சமூக அமைப்புக்காகவும் நடத்தப்பட்ட மாபெரும் மனித நடவடிக்கைகள்.

அன்மையில் நாம் பார்த்த கிழக்கு திமோர் கூட தனது போராட்டத்தில் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதை தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தது. "பெர்லிமோ" பிரமாண்டமான மக்கள் இயக்கமாகவும் இருந்தது.

ஏன், எமது அண்டை நாடான இந்திய சுதந்திர இயக்கம் எப்படி பல வண்ணங்களின் கலவையாக இருந்தது.

எமக்கு இன்னும் கிட்டவாக தீண்டாமை, பெண்ணடிமைதனத்துக்கு. எதிராக தந்தை பெரியாரின் தலைமையிலான திராவிட இயக்கம் எத்தகைய வெகுஜன இயக்கமாக இருந்தது?

இங்கு அவ்வாறு இருக்கவில்லை. அவ்வாறு உருவாகுவதற்காக தோன்றியிருந்த நிலைமைகளும் முளையிலேயே கருக்கப்பட்டன.

இப்போது சிஹல உறுமய போன்ற இனவாதிகள் கூட கெக்கலி கொட்டுகிறார்கள்.

தமிழ் மக்களின் சகல நம்பிக்கைகளையும் தவிடுபொடியாக்கிய இத்தகைய நிலைக்கு புலிகளே பிரதான பொறுப்பேற்கவேண்டும்.

ஒரு காலத்தில் கீர்த்தி வாய்ந்ததாகவும் தமிழ் போராட்டத்திற்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்த யாழ் பல்கலை கழகம் இன்று இருட்டில் தடுமாறுகிறது.

வரலாற்றுணர்வோ, புரிதலோ இல்லாமல் ஒரு குறிப்பிட்ட சில மாணவர்களின் இழுத்த இழுப்புக்கெல்லாம் இழுபடும் பரிதாப நிலைக்கு அது சென்றுள்ளது. இன்று ஏறுபட்ட நிலைக்கு யார் காரணம்? சூழல் பின்புலம் என்ன? என்பதை ஆராய்வதற்கு அங்கும் இடைவெளி இல்லாமல் போய்விட்டது.

### உண்மையை பேசுவோம் - உண்மைக்காக நிற்போம்

தற்போதைய சூழ்நிலையில் உண்மைகளை திறந்த மனத்துடன் பார்ப்பதும் உண்மைகளை உரைப்பதும் இழந்தவற்றை நட்புகள் உட்பட மீண்டும் பெறமுற்படுவதும் தமிழ் மக்களை இந்த இருட்டிலிருந்து சரியான திசைவழியில் நடத்திச் செல்வதற்கான தலமைத்துவமே எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர்களின் அரசசார்பற்ற நிறுவனங்கள், மனிதாபிமான அமைப்புக்கள், மத பீடங்கள் யாவுமே சொந்த சிந்தனையை இழந்துள்ளன. தங்களின் நிறுவன வரையறைகளுக்குட்பட்ட தார்மீக நெறிமுறைகளை இழந்துள்ளன.

இப்போது சகலரும் ஒருங்கிணைந்து ஜனநாயகத்திற்கும், மனித உரிமைகளுக்கும், அதிகார பகிர்விற்கும் மொத்தத்தில் ஒரு அச்சமற்ற வாழ்வுக்கும் குரல் கொடுப்பதே பிரதான காரியமாகும்.

## பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைப்படுத்தத் தடை

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள நாவிதன்வெளி பிரதேச செயலகம் 1993ம் ஆண்டு தொடக்கம் உப பிரதேச செயலகமாக செயற்பட்டு வந்தது. சம்மாந்துறை பிரதேச செலயகத்தில் இருந்து ஒரு சில வேலைகளை செய்வதற்காக உப பிரதேச செயலகம் ஆரம்பிக்கப்பட்டு தற்சமயம் பிரதேச செயலகமாக செயற்படுகின்றது. இப்பிரதேச செயலகம் 20கிராம சேவையாளர் பிரிவையும், 7000ம் குடும்பங்களையும் உள்ளடக்கியதாகும்.

1993ம் ஆண்டில் இருந்து அரசியற் கட்சிகளும் பொது அமைப்புக்களும் இப்பிரதேச வாழ் தமிழ் மக்களும் சேர்ந்து கொடுத்த அழுத்தம் காரணமாக 1999ம் ஆண்டு அரசாங்கத்தால் ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழுவிற்கு அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் தங்களுடைய பிரதேச செயலகம் சம்பந்தமான அறிக்கைகளை சமர்ப்பித்ததன் பலனாக இவ் உப பிரதேச செயலகம் பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டது.

இந்தக் குழு மல்வத்தை, வழந்தாபிட்டி, வீரமுனை போன்ற தமிழ் கிராமங்களை நாவிதன்வெளி பிரதேச செயலகத்துடன் இணைக்க விரும்பவில்லை. இக்குழுவிற்கு இருந்த சில இனவெறிபிடித்த அரசியல் பலம் உள்ளவர்களால் சில நெருக்குதல்கள் ஏற்படுத்தப்பட்டது நாம் அறிந்த உண்மையாகும்.

இவை மட்டுமன்றி ஆலையடிவேம்பு பிரதேச சபை எல்லைக்குள் இருந்த காரைதீவு கிராமத்தின் அண்ணளவாக கால் பங்கு கல்முனை தமிழ் உப பிரதேச செயலகம் பிரதேச செயலகமாக தரம் உயர்த்துவதற்கு இக்குழுவால் அங்கீகாரம் வழங்கப்படாமை இதுபோன்ற பல நிர்வாக ரீதியான அதிகார பரவலாக்கல் விடயங்களில் இக் குழு இனவெறிபிடித்த பலமுள்ள சில அரசியல்வாதிகளின் நெருக்குதலால் தமிழ் மக்களுக்கு சாதகமான எதையும் சரியானதையும் செய்யத்தவறியமை அவர்களின் செயற்பாடுகளில் இருந்து நிரூபணமாகிறது.

தற்சமயம் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவுக்குள் 20 கிராம சேவையாளர் பிரிவுகள் வருகின்றன. இதில் வீரச்சோலை கிராமத்தை மீண்டும் நாவிதன்வெளி பிரதேச செயலகம் நிர்வாகம் செய்வதற்கு சில தடைகள் ஏற்படுத்துவதாகவும் அந்த மக்கள் செய்வதறியாது விரிவான கடிதங்களை அரசியல் அதிகாரிகளுக்கும், அரசுக்கும் அனுப்பியுள்ளனர், உண்மைநிலை என்னவெனில் 360க்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் பல ஆண்டுகாலமாக நிரந்தரமாக வசித்து வருகின்றனர். இம் மக்களை பொறுத்தவரையில் 1993ம் ஆண்டில் இருந்து இன்றுவரை நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தின் கீழ்தான் இருந்து வருகின்றனர். அதையே இன்னும் விரும்புகின்றனர்.

சில அதிகாரிகளினதும், அரசியல்வாதிகளினதும் தலையீட்டால் நாவிதன்வெளி பிரதேச செயலகம் இக்கிராமத்தை நிர்வகிப்பதற்கு தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாக அக்கிராம மக்கள் கூறுகின்றனர். இதுமட்டுமன்றி மாகாண சபையால் உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட 10 இலட்சத்தில் குறைக்கப்பட்டு வழங்கப்படப்போகின்ற ஐந்து இலட்சத்தை சம்மாந்துறை பிரதேசசபை செயலக செயலாளரும் அங்கு திட்டமிட்டு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நடைமுறைகளை பார்க்கும்போது அரச நிர்வாகத்துக்குள் ஒரு பலமான இனவெறி பிடித்த அரசியற்பலம் கையோங்கி நிற்பதாக அறியமுடிகின்றது. அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு இன்னுமின்னும் நிாவாகத்தினூடாக புறக்கணிப்பை செய்யாமல் தடுக்க அரசும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் நல்ல முயற்சியில் இதய சுத்தியுடன் செயற்பட்டு இனமுரண்பாடுகளை தடுக்கவும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவும் கல்வி, சுகாதாரம், கலாச்சாரம் மேம்படுத்த பொருளாதாரம் போன்றவற்றை புதுப்பொலிவுடன் நேர்மையாக உழைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். இது சம்பந்தமான விரிவான கடிதம் ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர்களுக்கும் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**அம்பாறையிலிருந்து - துரை**

படிப்பகம்

www.padippakam.com



## கல்லடி திருச்செந்தூர் கிராமமும் அதன் குறைபாடுகளும்

மீன்பாடும் தேனாடாம் மட்டு மாநகரின் கிழக்கே வங்கக் கடல் அருகே அமைந்த கல்லடி கிராமத்தில் கடற்கரைக்கு அண்மையில் அமைந்த புதிய கிராமத்தை வேளாங்கண்ணிபுரம் என்றும் திருச்செந்தூர் கிராமம் என்றும் மக்கள் அழைத்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் வெவ்வேறு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் வசிக்கின்றனர். யுத்தத்தின் கொடுமையால் பாதிக்கப்பட்டு தமது உடமைகளை இழந்து இருப்பிடமின்றி அலைந்து தஞ்சம் புகுந்த மக்கள் தான் இக்கிராமத்தில் குடியேறியுள்ளனர்.

இவர்கள் தங்களுடைய கிராமத்தில் சகல வசதிகளையும் அமைத்துக் கொண்டு வாழ்ந்தவர்கள். ஆனால் இப்போது இருக்க ஒரு கட்டமைப்பான வீடு இன்றி மலசலகூடம் இன்றி இன்னும் பல தேவைகள் இன்றி பரிதவிக்கின்றனர். இவர்கள் படும் துன்பங்களை எழுத்தில் வடிக்க முடியாது இருந்தும் முடிந்தவற்றை வரைகிறோம்.

இக்கிராமம் மாநகரசபையின் எல்லைக்குட்பட்டதாக இருந்தும் கவனிப்பாரற்ற நிலையிலேயுள்ளது. இதில் சுமார் 250 குடும்பங்கள் வசிக்கின்றனர். இவர்களில் ஒரு பகுதியினருக்கு மட்டுமே அரசாங்கத்தினால் காணி ஒப்பமும், கடன் மூலம் வீடமைப்புத் திட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

மிகுதி ஒரு பகுதியினருக்கு வழங்கப்படவில்லை. கடன் மூலம் வீடமைப்புத் திட்டமும் வழங்கப்படவில்லை. இக்கிராமத்தில் உள்ள மக்கள் கூடுதலானோர் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர்.

இக்கிராம மக்கள் உழைப்பது உணவிற்கே போதாமல் உள்ள போது எப்படி வீடு அமைப்பது? இக்கிராமத்தில் உள்ள சகல பாதைகளும் மண்பாதையாகவே உள்ளது. இதுவரைக்கும் ஒரு பாதையேனும் அமைத்துக் கொடுக்கவில்லை. இதனால் உட்பகுதியில் வசிக்கும் மக்கள் ஒரு அவசர நோயாளியை வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதானாலும் பிரதான பாதைக்கே தூக்கிக் கொண்டே செல்ல வேண்டும்.

கர்ப்பிணித்தாய்மாரையும் கூட அது மட்டுமின்றி பாடசாலைக்கு செல்லும் சிறுவர்களில் பாதணிகளின்றி செல்வோரும் உண்டு. இவர்கள் மதிய வேளைகளில் பாடசாலை விட்டு வரும் போது படும் துன்பங்களை வர்ணிக்க முடியாது.

இக்கிராமத்தில் சூரியன் மறையத் தொடங்கியதும் இருள் சூழ்ந்து கொள்ளும். இவர்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் மாணவர்கள் படிப்பதற்கும், மின்சாரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சுய தொழில்களையும் இக்கிராம மக்கள் மேற்கொள்வதற்குத் தடையாகவுள்ளது. ஆகவே தம்முடைய கிராமத்தில் சகல வசதிகளுடனும் வாழ்ந்த மக்கள் இக்கிராமத்தில் படும் துன்பங்களை கருணையுடன் கருத்தில் கொண்டு இக்கிராம மக்களில் காணி உறுதி வழங்காமல் விடுபட்டோருக்கும் காணி உறுதியையும், கடன்மூலம் பெறும் வீடமைப்பு திட்டத்தையும் வழங்கி இக்கிராமத்தில் உள்ள மண் பாதைகளை தெருக்களாக அமைத்துக் கொடுத்தும், மின்சாரத்தை இக்கிராம மக்கள் தமது வீடுகளுக்கு பெறுவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஈ.பி.ஆர்.எல்.எப் சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும், அதிகாரிகளையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறது.

மட்டுநகர்-மதன்

## ஆற்றில் பயணமும் பரிதாப நிலமையும்

வாழைச்சேனை பிரதேசத்தில் நாசிவன் தீவு என்னும் கிராமம் ஒன்று உள்ளது. இக்கிராமத்தில் வசிக்கும் மக்கள் கூடுதலானோர் கூலித் தொழில் செய்பவர்களும் வறுமையின் கீழ் வாழ்பவர்களுமே, இக்கிராம மக்கள் வேலைக்கு செல்வதற்கும் தங்களுடைய விற்பனை நிலையத்திற்கும் தங்களுடைய விசேட தினத்திற்குப் பொருட்களை வேண்டுவதற்கும் வேறு அரச கருமங்களை முடிப்பதற்க்கும் இங்குள்ள மக்கள் வாழைச்சேனை நகருக்கு செல்வது வழக்கம். வாழைச்சேனை நகருக்கு செல்வதற்கு பஸ் சேவை குறைவாக உள்ளதால் வாழைச்சேனை நகருக்கும் நாசிவன் தீவுக்கும் இடையேயுள்ள ஆற்றை கடந்து செல்வதினால் இக்கிராம மக்கள் தங்களுடைய கருமங்களை முடிப்பதற்கு குறித்த நேரத்திற்கு செல்ல முடியும் குறுக்கேயுள்ள ஆற்றின் தூரம் சுமார் 175மீற்றர். இதனால் மக்கள் தோணியில் ஆற்றை கடப்பது வழமை. 20-02-2001 அன்று சுமார் 11.30 மணியளவில் தோணி ஒன்று பத்து மனித உயிர்களை சுமந்த வண்ணம் வாழைச்சேனை நகரை நோக்கி புறப்பட்டது. இதில் ஆறு மாதக் கைக்குழந்தையும் அடங்கும் ஆற்றின் நடுவே செல்லும் போது எதிர்பாராத விதமாக தோணி கவிழ்ந்தது. இப் பரிதாப நிலையை கண்ணுற்ற அப் பகுதியில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் இவர்களை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களால் மூன்று மாதக் கைக்குழந்தை உட்பட ஐந்து பேரையே காப்பாற்ற முடிந்தது. மிகுதி நால்வரை பிணமாகவே மீட்டனர். இதில்



ஆறு வயது சிறுவன் தனுஷன் பன்னிரெண்டு வயது மாணவி சுவர்ணா சிந்துஜா மற்றும் கணபதிப்பிள்ளை பரஞ்சோதி வயது 28, காத்தமுத்து அழகம்மா வயது 40. ஆகியோர் உயிர் இழந்தனர். இப்பகுதியில் எதிர்பாராத விதமாக இப்படி முன்னரும் நடந்துள்ளது. இதுவரை இப்பகுதி மக்களுக்கு தம்முடைய பயணத்தை மேற்கொள்வதற்கு ஒரு மோட்டார் படகு வசதியை சம்பந்தப்பட்டவர்கள் செய்து கொடுக்கவில்லை. இனியும் இப்படியான பரிதாப உயிர் இழப்புக்கள் ஏற்படாமல் இருக்க துரிதமாக நடவடிக்கை எடுத்து இப்பகுதி மக்களுக்கு ஒரு மோட்டார் படகை ஏற்படுத்தி கொடுக்குமாறு இப்பகுதி மக்களின் நலன் கருதி இவர்களின் சார்பில் **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் வாழைச்சேனை பிரதேச பொறுப்பாளர் அந்துணன் கந்தசாமி கடிதமூலம் கேட்டுள்ளார்.** ■

## ஒற்றுமைக்கு வழிவகுத்த சத்தியாக்கிரகம்



சத்தியாக்கிரகம் என்ற அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்த கடந்த கால வரலாறு பாரத மண்ணுக்கே உரித்தானது. அதனது வழித் தோன்றல்கள் மலையகத்தில் கடந்த 25 நாட்கள் நடத்தி முடித்த சத்தியாக்கிரகப் போராட்டம் மலையக மக்கள் சக்தியை சாதி, மத, இன வேறுபாடுகளுக்கப்பால் ஒன்று திரள வைத்திருக்கிறது. அன்று உரிமைக்காக இன்று சம்பள உயர்வுக்காக என்ற கோஷத்துடன் இ.தொ.கா தலைமை உறுப்பினர்கள் காந்திக் குல்லாய் அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை அனைவரையும் பிரமிக்க வைத்தது.

தீராத புற்று நோயாகத் தொடரும் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு திருப்திகரமாக இல்லை என்பது உண்மையேயாயினும் எதிரும் புதிருமாக இருந்த தொழிற்சங்கங்கள் ஓரணியில் நின்று செயற்பட்டவிதம் அனைவரையும் வியக்க வைத்துவிட்டது.

மலையகத்தில் அப்போராட்டம் பல்வேறு அதிருப்திகளின் குறியீடு. அடிப்படை வசதிகளான வீடமைப்பு, கல்வி, சுகாதாரம், மின்சாரம் வழங்குதல் முதலிய விடயங்களில் முக்கிய கவனம் செலுத்துவதாக அரசு கூறியபோதிலும் பெரிதாக எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மலையக மக்கள் தமது கட்டுப்பாட்டில் இருப்பதையே இந்த நாட்டின் தேசிய கட்சிகள் விரும்புகின்றன. இந்தப் போராட்டத்துக்கு தேசிய கட்சிகள் என்று சொல்லப்படுபவை முழுமனதாக ஆதரவளிக்கவில்லை என்பதை நடந்து முடிந்தப் போராட்டம் தெளிவாக்கியது.

காலத்திற்குக்காலம் நாட்டில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளால் மிகவும் பாதிப்புள்ளாகி இருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை போராட்டங்கள் மூலமாகவே நடந்தேறியுள்ளன. ஆனால் தீர்க்கமான முடிவுகள் காணப்படாமலேயே வெற்றி என்ற பேரில் கானல் நீராய் போய்விட்டன.

அரச தனியார் துறை ஊழியர்களுக்கும், ஓய்வூதியக்காரர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்ட போதும் இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி யாரும் ஏதும் பேசவில்லை. இது ஒன்றும் புதிதல்ல. தொடர்ச்சியாக விளங்கும் இனவாத ரீதியான கண்ணோட்டமே இது.

இச் சத்தியாக்கிரகம்தான் சமகாலத்தில் மலையகத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய எழுச்சி. மக்கள் சக்தி ஒன்றுபடுவதன் மூலம்தான் சாதிக்கலாம் என்ற நம்பிக்கையை தொழிற்சங்க வேறுபாடுகள் இன்றியும், இனமத வேறுபாடுகள் இன்றியும் அணிதிரள்வதன் மூலம் நிரூபிக்கப்பட்டது ஒரு முக்கிய அம்சமாகும்.

நாட்டின் பொருளாதாரத்தை ஆட்டம் காண வைப்பதாகவும், தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகள் வேறு நாடுகளை நாடிப் போகும் நிலையும் இந்தச் சத்தியாக்கிரக இயக்கம் தோற்றுவித்தது. ஆனால் எதுவுமே நடக்காதது போலவும், இயல்பாக இருப்பதாக எல்லோரும் காட்ட முற்பட்டனர்.

வேலை நிறுத்தப் போராட்டம் என்றால் தொழிலாளர்கள் பங்கு கொள்வார்கள் ஆனால் இன்று தொழிற்சங்கத் தலைவர்களே களத்தில் மக்களுடன் இறங்கினார்கள். தோட்ட நிருவாகங்கள் சில மக்களின் நியாயமான போராட்டத்திற்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்தமை காணக்கூடியதாக இருந்தது.

ஆனால் தோட்டக் கம்பனிகளும் முதலாளிமார் சம்மேளனமும் இறுக்கமான நிலையையே கடைப்பிடித்தன. மக்கள் எழுச்சிப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்த வேளையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தனது அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்ய தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

அது மட்டுமல்ல சத்தியாக்கிரகப் போராட்டம் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமாக மாற்றம் பெறும் என்றும், ஏற்கனவே கம்பனிகளுடன் இ.தொ.கா செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை வாபஸ் பெற வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் கம்பனிகள் கூறுவது போல் தேயிலைத் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குமானால் அதை கம்பனிகள் கைவிட்டு தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியதுதானே அதற்காகத் தொழிலாளார்களின் நலன் பாதிக்கப்படுவது எந்தவிதத்திலும் நியாயமற்ற செயல் என்றார்.

நெருக்கடிகள் தொடர்ந்ததைத் தொடர்ந்து சம்பளப்பிரச்சினைக்கு மாற்று வடிவத்தில் தீர்வு காணப்பட்டது. இது 25 நாள் மக்களின் ஒன்றுபட்ட போராட்டத்துக்கு வெற்றியென கொள்ள முடியாது. ஏனெனில் தொழிலாளர்களின் சம்பளத்தில் மாற்றம் எதுவும் நிகழவில்லை. ஏற்கனவே வழங்கப்பட்ட 121 ரூபாவை மாற்று வடிவத்தில் வழங்க முன்வந்துள்ளனர்.

கம்பனிகள் பெருந் தோட்டங்களை கையேற்றபின் தொழிற் சங்கங்களுக்கும் கம்பனிகளுக்கும் இடையில் செய்துக்கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தங்கள் தற்போது மக்களின் நியாயமான போராட்டங்களுக்கும் சட்டப் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது.

எனவே அரசாங்கம் தலையிட்டு நீதியான தீர்வை வழங்கி கம்பனிகளுக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்கும் ஒரு நெருக்குதலை கொடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு நிகழவில்லை.

என்றுமில்லாதவாறு மலையகத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும், மத ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற பொது நிறுவனங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள் அரச அமைச்சர்கள், அனைவரும் எவ்வித வேறுபாடின்றியும் ஆதரவளித்தனர்.

இந்த மக்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவாக வவுனியாவில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தியது.

இனியாவது எதிர்வரும் காலங்களில் நடக்கவிருக்கும் போராட்டங்கள், அரசியல் பிரச்சினைகள், தேர்தல்கள் எதுவாக இருந்தாலும் அந்த மக்களின் சமூக நலனை கருத்திற் கொண்டு இந்த ஐக்கியம் நிரந்தரமாக கடைபிடிக்கப்படுவதற்குரிய விட்டுக்கொடுப்புக்களையும், சகிப்புத் தன்மையையும் கொண்டிருப்பதோடு அரசியல், சமூக, பொருளாதார நலன்களுக்காக தொடர்ந்து ஐக்கியமாக போராடுவார்கள் என்ற மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவதே மலையக அரசியல் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் மக்களுக்கு செய்யும் சிறந்த சேவையாகும்.

**குறிஞ்சிக் குமார்**

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கையருக்கு தெரியாத தலிபான்களா?

கி.பி. 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிலை நொறுக்கப்பட்ட சம்பவமானது ஒரு மாபெரும் பண்பாட்டு படுகொலை என்பதை வரலாற்றுணர்வு கொண்ட எந்த மனிதனும் மறக்கமாட்டான்.

**காட்டுமிராண்டிகளின் ஆட்சி**

பாமியன் பள்ளத்தாக்கில் சிதைத்தழிக்கப்பட்ட புத்தர் சிலை ஆப்கானிய வரலாற்றின் குறியீடு மாத்திரமல்ல உலக மனிதகுல வரலாற்றில் பிரிக்கமுடியாத பகுதியது.

வரலாற்று உணர்வற்ற மத அடிப்படைவாத வெறிகொண்ட ஒரு குழுவின் கையில் ஆப்கான் இன்று சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருக்கிறது.



பெண்கள் தொழிலுக்குச் செல்லக்கூடாது. பாடசாலைக்குச் செல்லக்கூடாது, உடல் முழுவதையும் மறைத்து ஆடையணிய வேண்டும். சகல ஆண்களும் கட்டாயம் மதியம் பள்ளிவாசலுக்கு தொழுகைக்குச் செல்ல வேண்டும் இல்லாவிட்டால் அடி, உதை, மரணம் என்பனவெல்லாம் தலிபான்களுக்கு சர்வசாதாரணம்.

இந்தத் தலிபான்களையும் இதையொத்த குழுக்களையும் சோவியத்- ஆப்கானிஸ்தானில் பிரசன்னமாக இருந்த காலத்தில் நம் நாட்டில் முற்போக்காளர்கள் என்று தம்மை அழைத்துக் கொண்ட சில பிரிவினரும் ஆதரித்தார்கள்.

சோவியத் ஆதரவுடன் பதவியிலிருந்த நஜீபுல்லா புதிய உலகத்தைச் சேர்ந்த ஒரு நவீன மனிதர். அவருடைய ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு இந்த முற்போக்காளர் என்று தம்மை அழைத்துக் கொண்ட சிலரும் ஆதரவழித்தார்கள்.

இப்போது தாம் எதுவும் தெரியாதவர்கள் போல் நடந்து கொள்கிறார்கள்.






"பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்றான் பாரதி இன்று சமூகப் பொருளாதார கட்டுமானம் அனைத்துமே ஆப்கானிஸ்தானில் அழிக்கப்பட்டுள்ளன.

பூமிப்பந்தில் அது முடவர்களையும், அகதிகளையும், விதவைப் பெண்களையும், பசியையும், அறியாமையையும், மரணத்தையும்,அழிந்து போன கட்டடங்களையும் கொண்ட பூமியாகக் காட்சியளிக்கிறது.

**இலங்கை தலிபான்கள்**

இலங்கையிலும் தலிபான்களை ஒத்த பேரினவாதிகளும், தமிழினவாதிகளும் இருக்கவே செய்கிறார்கள். ஏதோ தலிபான்களின் காட்டுமிராண்டித்தனம் தங்களுக்குத் தெரியாத ஒரு புதிய விடயம் போல் பாசாங்கு செய்கிறார்கள்.

ஒரு இலட்சம் புத்தகங்களுடன். தென்னாசியாவின் தலை சிறந்த நூல் நிலையத்தை எரித்தது இலங்கையின் சட்ட ஒழுங்கு துறையினர்தான்.

(தொடர்ச்சி 10பக்கம்)

# சோக்கிரட்டீஸ் பதில்கள்

க. அரசரத்தினம் – வெள்ளவத்தை.

***அரபாத்திற்கு தான் சொன்னது விளங்கவில்லையெனில் வன்முறைகளை நிறுத்துமாறு கூறிவிடும்படி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி புஷ் கூறியிருக்கிறாரே?***

அவர் தனது மூதாதையரின் பாஷையில் பேச விரும்புகிறார் போலும். விளைவு விபரீதமாகத்தான் இருக்கும். அமெரிக்கா தனது மத்திய கிழக்குச் செல்லப்பிள்ளையின் விடயத்தில் எந்த அநியாயங்களையும், அக்கிரமங்களையும் பொருட்படுத்துவதில்லை.

எஸ். பிலோமினா – முருங்கன்.

***மன்னாரில் இரண்டு பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தபட்ட பின்னரும் பெண்கள் இயக்கங்களின் எதிர்ப்புணர்வுகள் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லையே ஏன்?***

பெண்களின் அபிவிருத்தி, பெண்களின் முன்னேற்றம் என்று அரச சார்பற்ற நிறுவனங்களுக்கென பணம் குவிகிறது. அவர்கள் புங்குடுதீவு சாரதாம்பாளையும்தான் கண்டுகொள்ளவில்லை. தற்போது மன்னாரில் நடைபெற்றதும் அவ்வாறுதான்.

மிக வசதியான சூழலில் கொழும்பில் நடைபெறும் ஒரு சம்பவத்திற்கு மாத்திரம் இவர்கள் எதிர்ப்புக் காட்டுவார்கள் இந்த நாகரீகநாரிமணிகள்.

தலிபான்கள் புத்தர் சிலை உடைத்தற்காக கண்டனக்குரல் எழுப்புபவர்கள் இவர்கள், தலிபான்களைத் தோற்கடிக்கும் விதத்தில் காட்டுமிராண்டிகள் போல் நடந்துக்கொள்வதைக் கண்டு கொள்வதில்லை. இன அபிமானம் ஏனெனில் பாலியல் பலாத்காரத்தைச் செய்தவர்கள் சிங்கள பொலிசார். சிங்கள கடற்படையினர். இந்த இன அபிமானத்திற்கும் தலிபான்களின் அடிப்படைவாதத்துக்கும் வித்தியாசம் எதுவும் கிடையாது.

கே. ரமணன் – யாழ்ப்பாணம்.

***புலிகள் மீது தடையை நீக்குமாறு சில தமிழ் கட்சிகள் பாசாங்குத்தனமாக குரல் எழுப்புகின்றனவே?***

தம்மீது விதிக்கப்பட்ட புலிகளின் தடைபற்றி இவர்கள் எப்போதும் கேள்வி எழுப்புவது கிடையாது "தான் போக வழியைக் காணேல்ல மூஞ்சூறு விளக்குமாத்தையும் தூக்கிக் கொண்டு போச்சுதாம்" என்ற பழமொழிதான் ஞாபகத்துக்கு வருகிறது.

தா. சுந்தரலிங்கம் – களுவாஞ்சிக்குடி.

***மட்டக்களப்பில் உலக அரங்கவிழா நடைபெற்றதே அதைபற்றி கூறுங்களேன்?***

எமது பாரம்பரிய கலைகளையும், புதியவற்றையும், உலகக் கலைகளுடனான உறவுகளையும் ஒட்டிய நல்லதொரு தேடல் முயற்சி.

எம். ராஜேஸ்வரி – கொட்டாஞ்சேனை.

***குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் கூட்டத்தில் உரையாற்றிய சிலர் அவர் உயிருடன் இருந்திருந்தால் பிரிட்டன் தடை விதித்திருக்காது என்று பேசினார்களாமே?***

பாவம் குமார். நல்ல மனுசன். பல சிறையில் இருந்த இளைஞர்களுக்காக முன்வந்து நீதிமன்றங்களில் இலவசமாக வாதாடியவர். இப்படி பல விடயங்களை பேசியிருக்கலாம். குமாரினால்



இயலாத விடயத்தைப் பற்றி பேசுவதும், அப்போதுதான் மரத்தில் இருந்து இறங்கி வந்தவர்கள் போல் கைதட்டுவதும்தான் சகிக்க முடியவில்லை.

ஆர். ஜெயராணி :- வவுனியா.

***வடக்கு கிழக்கில் பாலியல் பலாத்காரம், படுகொலை. வெளிநாடுகளில் பாலியல் பலாத்கார படுகொலை. கொலை, கொள்ளை, புதைக்கபட்ட சடலத்தின் தலையை வெட்டி அனுப்புகிறார்கள். என்ன கலிகாலமா?***

கலிகாலம்தான். வன்முறை ஊக்குவிக்கப்படும்போது மனித மனங்கள் விகாரமாகி விடுகின்றன. அரசியல்வாதிகள் ஆயுதந்தாங்கியோரின் அனுசரணையுடன் இந்தச் சக்திகள் நாட்டில் கோலோசத் தொடங்கியுள்ளன. இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி நடைபெற மனித மனங்கள் மரத்துப்போய் இவையும் வழமை என்று எடுத்துக் கொள்ளும் நிலைமை உருவாகியுள்ளது. யுத்தம் முடிவுக்கு வந்து சமாதானம் விரைவில் ஏற்பட வேண்டும் என்பதையே இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன. எமது நாடு கண்டுள்ள நோய் சீழ்பிடித்து ரணமாகி, முடைநாற்றம் வீசுவதே மேற்படி சம்பவங்கள்.

பி. வித்தியாதரன் – யாழ்ப்பாணம்.

***அஸ்லி வில்ஸ் யாழ்ப்பாணத்தில் பேசிய பேச்சுக்காக சில பேர்வழிகள் வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கிறார்களே?***

இது போலியானது. ஏக பிரதிநிதிகளாக யாரும் இருக்க முடியாதென்று கூறினால் அது தவறா? அடிப்படை ஆறறிவு குணாதிசயங்கள் எம்மவர்களுக்கு வேண்டும்.



எஸ். ரகுநாதன் – திருமலை.

***15 வருடங்களுக்கு மேலாக மாபெரும் விஞ்ஞான பங்களிப்பை வழங்கி வந்த மிர் விண்கலம் நிர்மூலம் செய்யப்பட்டதேன்?***

பொருளாதார, பராமரிப்பு காரணங்களைவிட வானவெளியை ஆக்கிரமிக்க விரும்பும் உலக வல்லாதிக்க கழுகுகளுக்கு மிர் ஒரு உறுத்தலாக இருந்தது.

ஆர். குமாரசாமி – தெல்லிப்பழை.

***இலங்கைத் தமிழர்கள் படித்தவர்கள், அறிவாளிகள், கடும் உழைப்பாளிகள் என்ற காலம் போய் சர்வதேச போதைவஸ்து கடத்தல்காரர்கள், ஆட்கடத்தல் காரர்கள், நாடுகளின் சட்டங்களுக்கு சவாலாக இருப்வர்கள் என்ற அபகீர்த்தி வந்திருக்கிறதே?***

தமிழர்களின் அரசியலிலும், சமூகப் பொருளாதார வாழ்விலும் மாறுபட்ட சிந்தனைக்கு இடமில்லாமல் போய் வன்முறை ஆதிக்கம் பெற்றதன் விளைவே இது.



எம். செல்வகுமார் – மட்டக்குளிய.

***அதிகாரப்பரவலாக்கல் பகிர்வு பற்றி பேச்சுக்களை காணோமே?***

தற்போது சிஹல உறுமய போன்ற இனவாத கட்சிகள் தமிழர்களுக்கோ, ஏனைய சிறுபான்மை இன மக்களுக்கோ எதுவும் கொடுக்கக்கூடாது என்ற ஆரவாரமும், வாயில் வந்ததைப் பேசும் நாட்டின் பிரதான மந்திரியின் பொறுப்பற்ற தன்மையும் எமது நாட்டின் எதிர் காலத்துக்கு அவ்வளவு நல்ல சகுனமாக தெரியவில்லை.

எஸ் . கிருஷ்னானந்தன் – திருமலை.

***மார்ச் 31ம் திகதி தந்தை செல்வா ஞாபகார்த்த நிகழ்வுகள் பரவலாக நடைபெற்றனவே?***

தந்தை செல்வா கொடுத்து வைத்தவர். தற்போதைய அரசியல் தலைவர்கள் போல் குரூரமாக அகாலமாக மரணிக்கும் நிலவரம் அவருக்கு ஏற்படவில்லை.

ஏ. சுதர்சன் – ஹப்புத்தளை

***தலவாக்கொல்லையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில உயர் பொலிஸ் அதிகாரியொருவர் மலையகத் தமிழர்கள் வடக்கு கிழக்குத் தமிழர்களுடன் எத்தகைய உறவுகளையும் வைத்துக் கொள்ள கூடாது, அவர்கள் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும் என்று போதனை செய்தாராமே?***

பாசிசப் போதனை. யூதர்களுடன் சகவாசம் கொள்ளக்கூடாதென்று ஹிட்லர் ஜேர்மனியர்களுக்கு போதித்தான் அது கடந்த நூற்றாண்டின் மாபெரும் கொடுஞ்செயல் என வர்ணிக்கப்பட்டது. இலங்கையின் பேரினவாத ஜனநாயகம், கம்பிகளின் பின்னால் இருக்க வேண்டியவர்கள் எல்லாம் சுதந்திரமாக நடமாடவிட்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# கிரிக்கெட் ஜாம்பவான்

கிரிக்கெட் விளையாட்டு ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை கிரிக்கெட் விளையாட்டுலகில் எவருமே எட்ட முடியாத இடத்தில் ஜாம்பவானாகத் திகழ்ந்தவர் அவுஸ்திரேலியாவைச் சார்ந்த சேர் டொன் பெரட்மென் அவர்களேயாகும். 1928 முதல் 1948 வரை கிரிக்கெட் உலகின் முடிசூடா மன்னனாக வெற்றி வாகை சூடியவர். இவரது துடுப்பாட்டத் திறமையுடன் ஒப்பிடுவதற்கு ஒரு சிறு உதாரணத்தை நாம் பார்க்கலாம்.

தற்போது உலகில் ஆகக் கூடுதலான டெஸ்ட் ஓட்டங்களை பெற்றவர் அவுஸ்திரேலியாவைச் சார்ந்த அலன்போர்டர். இவர் 265 இன்னிங்ஸ் துடுப்பாடி 11,174 ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஆனால் சேர் டொன் பெரட்மன் 80 இன்னிங்ஸில் மட்டுமே துடுப்பாடி 6996 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

அலன்போர்டரின் ஓட்ட சராசரி 50-56 ஆனால் சேர்டொன்னின் ஓட்டச் சராசரி 99.94 எனவே சேர் டொன் பெரட்மன். அலன் போர்டரைப் போன்று 265 இன்னிங்ஸில் துடுப்பாடியிருந்தாரேயானால் அவர் 26,000 ஓட்டங்களுக்கு மேல் குவித்திருக்கக் கூடும். இதுவரை காலமும் டெஸ்ட் போட்டிகளில் (50க்கு மேல்) விளையாடிய வீரர்களில் சேர் டொன் பெரட்மெனின் ஓட்டச் சராசரி 99.96 (கிட்டத்தட்ட 100 என எடுத்துக் கொள்வோமே).

ஆனால் உலகின் ஏனைய சிறந்த வீரர்களான சேர் கார்ஃபீல்ட் சோபேர்ஸ், சச்சின், லாரா, விவியன் ரிச்சேர்ட்ஸ், கவாஸ்கார், அலன்போர்டர் போன்ற பலரது ஓட்டச் சராசரி 50 இலிருந்து 58 வரையே உள்ளது. சேர் டொன் பெரட்மன்னின் சாதனைகளை தகர்க்கக்கூடிய ஒரு கிரிக்கெட் வீரர் மீண்டும் உலகில் தோன்றுவாரா என்பது சந்தேகமே. அதற்குப் பல காரணங்கள் உண்டு 1928 முதல் 1948 வரை இருந்த கிரிக்கெட் நிலைமைகள் தற்போது இல்லை. இன்றைய திகதியில் 10 நாடுகள் டெஸ்ட் போட்டிகளில் பங்கு கொள்கின்றன.

உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட டெஸ்ட் ஆடுகளங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட தர நிலைகளில் உள்ளன. 90 வீதமானவை பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமானவையாக உருவாக்கப்பட்டுள்ளன. சேர் டொன் பெரட்மென் காலத்தில் மொத்தமாக 5 நாடுகளே டெஸ்ட் போட்டிகளில் விளையாடின.

இவற்றில் சேர் டொன் மொத்தம் 18 ஆடுகளங்களிலேயே விளையாடியுள்ளார். அதுவும் 75 வீதத்திற்கு மேற்பட்ட டெஸ்ட் போட்டிகள் இங்கிலாந்துக்கு எதிரானவையேயாகும். மேலும் தற்போதைய கிரிக்கெட் ஒழுங்கு விதிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் (குறிப்பாக LBW முறையில் அவுட்டாவது) பந்து தடுப்பு முறைகளில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றங்கள், பந்து வீசுவதில் ஏற்பட்டுள்ள நுணுக்கங்கள், ஆகியவை துடுப்பாட்ட வீரரை சிரமத்திற்குள்ளாக்குபவையே ஆகும்.

இவை எல்லாவற்றையும் கருத்தில் எடுத்துப் பார்க்கும் போது இன்றைய காலக்கட்டத்திலுள்ள துடுப்பாட்ட வீரர்களில் சச்சின் டெண்டுல்கார்-சேர் டொன் பெரட்மன்னிற்கு சரிநிகர் சமானமாகவுள்ளார் என்றே கருத வேண்டும்.

## மேற்கிந்திய தீவுகள்-தென்னாபிரிக்கா

மேகிந்திய தீவுகள் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிற்கிடையேயான டெஸ்ட் தொடர் போட்டிகளில் முடிவடைந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்கா 1-0 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது. மேற்கிந்திய தீவுகளின் புதிய அணித் தலைவரான கார்ல்ஹூப்பர் திறமையாக ஆடிய போதிலும் அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமான பிராயன் லாரா இதுவரை பிரகாசிக்கவில்லை.

ஆயினும் இத்தகைய தோல்விகள் மத்தியிலும் அனைத்து மேற்கிந்திய தீவுகள் மக்களும் பெருமைப்படக்கூடிய ஒரு விஷயம்-வேகப்பந்து வீச்சாளர் கோட்னி வால்ஸ் தனது 500வது விக்கெட்டைக் கைப்பற்றிய சாதனையேயாகும். கோட்னி வால்ஸ் 18 வருடங்கள் தொடர்ந்து விளையாடி தனது 38 வது வயதில் 500 டெஸ்ட் விக்கெட்டுக்களை 127 டெஸ்ட் போட்டிகளில் வீழ்த்தியிருப்பது மிகவும் போற்றப்படக்கூடிய சாதனையேயாகும். இவரது சாதனையை முறியடிப்பதற்கு யார் வருவாரோ?



## நியூசிலாந்து - பாகிஸ்தான்

நியூசிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளின் தொடரில் வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் அணியில் வாசிம் அக்ரம், அக்தார், சாயி அஹமட் ஆகியோர் இல்லாத நிலையிலும், யூசுவ் யுஹானா, இன்சாமாஉல் ஹக், மொஹமட் ஆகியோர் திறமையாக விளையாடுகின்றார்கள்.

## இந்தியா - அவுஸ்திரேலியா

தொடர்ச்சியாக 15 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்று உலக சாதனையை நிலைநாட்டி இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலியா அணி முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தியாவை வென்று தனது வெற்றி எண்ணிக்கையை 16ஆக உயர்த்திக் கொண்டது.

பத்திரிகையாளர்களும், கிரிக்கெட் விமர்சகர்களும் அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியை "உலக சாம்பியன் அணி" தூக்கிக் கொண்டாடின. ஆனால் அந்தோ பாவம்-அவுஸ்திரேலியா அணி இந்தியாவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மண்ணை கவ்வியது.

மும்பாய் இரண்டாவது டெஸ்ட்டில் ஹர்பஜன்சிங் எனும் 20 வயது இந்திய இளைஞர் "ஹட்ரிக்" முறையில் 3பந்து வீச்சுக்களில் 3விக்கெட்டுக்களை எடுத்து சாதனைப் படைத்ததுடன், மொத்தமாக 2வது டெஸ்ட் போட்டியில் 15 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

இதே டெஸ்ட் போட்டியில் இந்தியாவைச் சார்ந்த வி.வி.எஸ் லக்ஷ்மன் முதல் இன்னிங்ஸில் சதம் அடித்ததுடன் இரண்டாவது இன்னிங்ஸில் 281 ஓட்டங்களைப் பெற்று இந்திய வீரர்களிலேயே அதிக ஓட்ட எண்ணிக்கை பெற்ற வீரராக சாதனைப் புரிந்தார்.

இந்திய அணி தனது 2வது இன்னிங்ஸில் 653 ஓட்டங்களைப் பெற்று ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கைச் சாதனையையும் முறியடித்தது.

இந்திய அவுஸ்திரேலியாவின் மூன்றாவது டெஸ்ட் போட்டி சென்னையில் நடந்தது. இந்த டெஸ்ட் போட்டி விறுவிறுப்பாக இருந்த போதிலும் இறுதியில் இந்திய அணி 2 விக்கட்டுக்களால் அவுஸ்திரேலியாவை வென்றது. இந்த டெஸ்ட் தொடரில் இந்திய அணி சார்பாக சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் 35 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை ஏற்படுத்தியுள்ளார்.

அதேவேளை இந்திய அணியின் துடுப்பாட்டக்காரரான வி.வி.எஸ். லக்ஷ்மன் 580 ஓட்டங்களைப் பெற்று தான் ஒரு சிறந்த துடுப்பாட்டக்காரர் என்பதனை நிரூபித்துள்ளார். இவர்களுடன் சச்சின்டென்டுல்கார், ராகுல் ட்ராவிட் ஆகியோரும் திறமையாக விளையாடினார்கள்.

கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் உலக சாதனை ஏற்படுத்தி தன்னை "உலக சாம்பியன் அணி" யாக பறைசாற்றிக் கொண்ட அவுஸ்திரேலியா அணி தனது உண்மை நிலை என்ன வென்பதை இனியாவது உணர்ந்துக் கொள்ளுதல் வேண்டும்.

## இலங்கை-இங்கிலாந்து

இலங்கை கிரிக்கெட் ரசிகர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட இலங்கை இங்கிலாந்து டெஸ்ட் போட்டி தொடர் ஏமாற்றத்திலேயே முடிவடைந்துள்ளது. 1998ம் ஆண்டு இங்கிலாந்து சென்று வெள்ளைக்காரனின் மண்ணிலேயே அவர்களை 10 விக்கெட்டுக்களால் வென்ற இலங்கை அணி தற்போது சொந்த மண்ணிலேயே (புளியமரத்தடியில்) விளையாடும் பொழுது 2-1 என்ற கணக்கில் தோல்வியடைந்துள்ளது. இதற்கான அடிப்படைக் காரணங்கள் மூன்று எனக் கூறலாம்.




(1) இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் குறிப்பாக "அதிரடி மன்னன்" ஜெயசூரியா, அத்தபத்து (இவர் இலங்கை வென்ற முதலாவது டெஸ்டில் இரட்டைச்சதம் அடித்ததுடன் முட்டை போடத் தொடங்கிவிட்டார்) மஹேல ஜெயவர்த்தனா, குமார சங்ககார, ரஸல் ஆர்னல்ட் ஆகியோர் நின்று நிலைத்து நிதானத்துடன் ஆடவில்லை.

(2) இலங்கையின் நம்பிக்கை நட்சத்திரமான முத்தையாவின் சுழற்று வாய்க்காது போனது.

(3) நடுவர்கள்-நடுவில் நிற்காமல். அரிவரி வகுப்பில் பிள்ளைகள் ஒண்டுக்குப் போக நெடுகலும் கையைத் தூக்குவது போல அதுவும் குறிப்பாக இரண்டாவது டெஸ்டில் குரேயின் தீர்ப்புகள் இலங்கையை அதிகளவில் பாதித்தது.

எதைத்தான் சொன்னாலும் எங்கட சொந்த வளவுக்குள்ள வந்து எங்களையே வெள்ளைக்காரன் காலை மடக்கி இழுத்து விட்டதுதான் கொஞ்சம் "அப்செட்" என்ன செய்யிறது



எங்கட பொடியள் ஒரு நாள் போட்டியில மடக்கி விட்டுட்டாங்க பார்த்தியளோ, என நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருப்போம்.

தயாளன்

## இலங்கையருக்கு தெரியாத..... 09ம் பக்க தொடர்ச்சி

பாடல் பெற்ற தலங்களான திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தையும், திருக்கேதீஸ்வரர் ஆலயத்தையும் இராணுவ முகாம்களாக மாற்றியவர்கள் இங்குள்ள தலிபான்கள்தான்.

1990 இல் முஸ்லீம் மக்களை இனச்சுத்திகரிப்புச் செய்து பள்ளிவாசல்களையும் வீடு வாசல்களையும் ஆக்கிரமித்து சொத்துக்களை சூறையாடியவர்கள், காத்தான்குடி பள்ளிவாசல்களில் புகுந்து கொலைவெறி ஆடியவர்கள் எல்லோரும் இங்குள்ள தலிபான்கள்தான்.

தலதாமாளிகைக்கு குண்டு வைத்தவர்களும் அவர்கள்தான்.

இங்கு பௌத்த மகா சங்கங்களின் ஆஸ்த்தான குருக்களுக்கு பிற சமயத்தவர்களின் மீது குரோதம் பாராட்டுவதே பிரதான தொழில். இவர்களுக்கெல்லாம் இச்சம்பவத்தைக் கண்டிப்பதற்கு அருகதையெதுவும் கிடையாது.

மனுக்குலத்தையும் அதன் வரலாற்றையும் நேசிப்பவர்களுக்கு அந்த தகுதியுண்டு.

### வரலாற்றுணர்விலிகள்

தலிபான்களுக்கு இருப்பது புனித நாலான குர்ஆன் இல் சொல்லப்படாத இஸ்லாமிய வெறி. இங்கு போதி மாதவனை பின்பற்றுவதாகச் சொல்லுவது பௌத்த சிங்கள வெறி. பஞ்சமா பாதகங்களை வெறுப்பதாக சொல்பவர்களுக்கு சைவத் தமிழ் வெறி. இந்த மதங்கள் போதித்த மேன்மையான விடயங்கள் தமது சமூகத்தில் தலைமுறை தலைமுறையாக கட்டிக்காக்கப்பட்டு வந்த மானிட விழுமியங்கள் பற்றி இவர்களுக்கு சிறிதளவும் அக்கறையில்லை.

வடக்கு கிழக்கு மாகாண அரசை கலைப்பதற்கும் அதன் ஆக்கப் பூர்வமான நடைமுறைகளை அழித்தொழிப்பதற்கும் துணைபோனவர்கள் தமிழ் சமூகத்தினதும், முஸ்லீம் சிங்கள மக்களினதும் பாரம்பரிய கலாச்சார வாழ்வு இன்று நிர்மூலம் செய்யப்பட்டு ஒரு ஆப்கானிஸ்தான் உருவாவது பற்றி மூச்சு விடுவதில்லை.

ஏதோ வல்லமைமிக்க சக்திக்கு அடிபணிந்து தமது பிழைப்பை நடத்துகிறார்கள்.

ஒரு விதத்தில் இவர்களும் தலிபான்களின் வரலாற்றுணர்வு இல்லாத சிந்தனை போக்கை கொண்டவர்களே.

தமிழர்களின் போராட்ட வரலாறு பிரபாகரன் தானே துப்பாக்கி செய்து சுடத் தொடங்கியதிலிருந்துதான் ஆரம்பித்ததென்று புலிகள் சொல்லும் கிளிப்பிள்ளை கதையைத்தான் இவர்களும் சொல்கிறார்கள் ஆப்கானிஸ்தான் முல்லாக்களைபோல. எப்போதும் அடிப்படைவாதிகளுக்கு வரலாற்றுணர்வு இருப்பதில்லை. அவர்கள் தங்களில் இருந்துதான் தொடங்குகிறது என்று முட்டாள்தனமாக நினைக்கிறார்கள்.

பைபிள் வாசகம் ஒன்றுதான் இங்கு குறிப்பிடக் கூடியது. "உன் கண்ணிலுள்ள விட்டத்தை அகற்றிவிட்டு மற்றவர் கண்ணில் இருக்கும் துரும்பை பார்" என்பதே அது.

படிப்பகம்

www.padippakam.com



# கொசோவோ — இந்த நூற்றாண்டிலும் தொடரும் துயரம்

**மசிடோனியாவிற்கும் அல்பேனியக் கெரிலாக்களுக்குமிடையே மோதல்கள் முரண்பாடுகள் வெடித்துள்ள இன்றைய நிலையில் கொசோவாவின் துயர்பற்றி ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் உயிர் நிழல் சஞ்சிகையில் உமாகாந்தன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று இங்கு மறுபிரசுரமாகிறது.**

ஒரு புதிய நூற்றாண்டை நோக்கி உலகம் நகர்வதற்கு இன்னமும் சில மாதங்கள் மட்டுமே இருக்கும் நிலையில் இப்படி ஒரு கொடுமை. பத்திரிகைகள், தொலைக்காட்சி சேவைகள் மற்றும் செய்தித் தொடர்புச் சாதனங்கள் அனைத்தையும் இன்று ஆக்கிரமித்திருப்பது கொசோவோவின் சோகம். ஒரு புறம் கொசோவோவில் வாழும் அல்பேனிய மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கி இனத்துவ சுத்திகரிப்பு (Ethnic Cleansing) என்ற பெயரில் மிக மோசமான கொடுமைகளை அம் மக்கள் மீது நிகழ்த்தி வரும் யூகோஸ்லாவிய ஜனாதிபதி ஸ்லோபொடன் மிலோசவிச்சின் தலைமையிலான சேர்ப் தேசியவாதிகளின் வெறியாட்டம். மறுபுறம் கொசோவோவின் அல்பேனிய மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்துக்கொண்டு தம்முடைய சுயலாபங்களுக்காக, சேர்ப்படையினருக்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் அப்பாவி யூகோஸ்லாவிய மக்களுக்கெதிராக மிகக் கொடிய யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டது மட்டுமல்ல, கொசோவோவின் அல்பேனிய மக்களை இலட்சக்கணக்கில் அகதிகளாக்கும் கொடுமையினையும் நடத்தும் நேட்டோ. இன்று எம் கண்முன்னே நடக்கும் இந்தக் கொடுமைகளுக்கும் சோகங்களுக்கும் சேர்பிய தேசிய வெறியர்களும், நேட்டோவுமே காரணம்.

கொசோவோவில் வாழ்ந்து வரும் அல்பேனிய மக்களின் பிரச்சினைகள் இன்று நேற்று எழுந்ததல்ல. இந்த மக்களின் பிரச்சினைகளும் கடந்தகால வரலாறுகளுடன் பின்னிப் பிணைந்தது. 1389ம் ஆண்டிலே ஓட்டோமன் துருக்கியர்கள் கொசோவோவிலுள்ள சேர்ப் தலைமையிலான இராணுவத்தை தோற்கடித்தனர். இதனால் அங்கிருந்த பெரும்பான்மையான மக்கள் கொசோவோவிலிருந்து வெளியேறி வடக்கு நோக்கிச் சென்று குடியேறினர். இருப்பினும் கொசோவோதான் தமது தாயகம் என்பதில் இந்த சேர்புகள் பிடிவாதமாகவே இருந்தனர்.

1929ம் ஆண்டு கொசோவோ யூகோஸ்லாவிய ராஜதானியின் ஒரு பகுதியாயிற்று. இரண்டாவது உலக யுத்தத்தின் பின் யூகோஸ்லாவியா ஒரு கம்யூனிசக் குடியரசாயிற்று. 1979ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய சட்டமொன்று கொசோவோவிற்கு அரசியல் பொருளாதார தன்னுரிமைகளை அளிக்க வழிகோலிற்று.

ஆனால் 1989ம் ஆண்டு ஜனாதிபதி ஸ்லோபொடன் மிலோசவிச் தேசியவாதப் போர்வையில் கொசோவோவிற்கு அளித்த அரசியல் பொருளாதார தன்னுரிமைச் சட்டத்தை இரத்துச் செய்தார். எரியப்போகும் பிரச்சினையின் ஆரம்பம் இது.

இதன் வெளிப்பாடு 1992ம் ஆண்டு நடந்த வாக்கெடுப்பில் யூகோஸ்லாவியாவின் இதரப் பகுதிகளில் வாழ்ந்த சேர்பியர்கள் அல்லாத இதர இன மக்கள் வாக்களித்தது போலவே கொசோவோவில் வாழ்ந்த அல்பேனிய இன மக்களும் தாங்களும் யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிந்து செல்ல விரும்புவதாக வாக்களித்தனர். பிரிந்து போவதற்கான இதர இன மக்களின் முயற்சிகளை தனது படையினரின் துணையுடன் மிலோசவிச் நசுக்கத் தொடங்கினார்.

குரோசியா, பொஸ்னியா என்றெல்லாம் இந்த நூற்றாண்டில் மிலோசவிச் ஆயுதங்களால் எழுதிய இரத்த வரலாறுகள் விரிந்து இப்போது கொசோவோவில் படர்ந்துள்ளது. பிரிவினைக்கான அரசியல் முயற்சிகள் அனைத்தும் சேர்ப் இராணுவ ஒடுக்கு முறைகளால் தோல்வியடைந்த நிலையில் 1998ம் ஆண்டு KLA எனப்படும் கொசோவோ விடுதலை இராணுவ ஒடுக்கு முறைக்கு எதிராக தனது ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தது.

KLA யின் ஆரம்பம் கொசோவோவிற்குத் தன்னுரிமை கேட்ட மிதவாத அரசியற் கட்சிகளை ஓரம் கட்டியது. KLA தன்னுரிமைக் கோரிக்கையை நிராகரித்து சுதந்திரக் கொசோவோவை வென்றெடுப்பதே தனது இலட்சியம் என அறிவித்தது. KLA க்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் கொசோவோவிலுள்ள அல்பேனிய இன மக்களை மிக மோசமாக ஒடுக்க ஆரம்பித்தது சேர்ப் இராணுவம்.

கொசோவோவின் பரப்பளவு 10,887 சதுர கிலோ மீற்றர். அங்கு வாழும் மக்கள் தொகை 2 மில்லியன். இதில் 90 வீதமானவர்கள் அல்பேனிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது 18 இலட்சம் மக்கள் அல்பேனிய இனத்தவர்கள். மீதி 10வீதத்தினர் அதாவது 2 இலட்சம் மக்கள் சேர்புகள். சேர்பியாவின் ஆளும் எல்லைகளில் 12.5 வீதமான நிலப்பரப்பு கொசோவோவாகும்.

இங்கே மதவாதிகளான சேர்புகளின் 1300 தேவாலயங்கள் அமைந்திருப்பதால் சேர்புகளின் ஜெருசலம் என்று கூட கொசோவோ அழைக்கப்பட்டது. ஆனால் இங்குள்ள அல்பேனிய இன மக்களில் கத்தோலிக்க மத மக்கள் 10 வீதத்தினர், ஒதொடொக்ஸ் எனும் மதவாதிகள் 20 வீதத்தினர். இன்றைய கொசோவோ பிரச்சினைக்கு இனம், மதம், அகண்ட சேர்பியா, அகண்ட அல்பேனியா இப்போது நேட்டோ என்றெல்லாம் நிறையக் காரணங்கள் உண்டு.

கொசோவோ பிரச்சினை என்பது வெறுமனே இன்றைய எரியும் பிரச்சினை மட்டுமல்ல நீண்டகால மாகத் தீர்வு காணமுடியாத இரு இன மக்களுக்கிடையிலான மோதல். அது மட்டுமல்ல பல்கன் நாடுகளிடையே பெரும் வெடிகுண்டாக வெடிக்கப் போகும் பிரச்சினை.

ஜனாதிபதி டிட்டோவின் மறைவிற்குப் பின்னர் யூகோஸ்லாவியாவில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளும் இதர குடியரசுகளை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாத கையாலாகாத்தனமும், கொசோவோவும் கை நழுவிப் போய் விடுமோ என்ற பீதியும் இணைந்து இன்று சேர்புகள் கொசோவோவின் அல்பேனிய மக்கள் மீது கட்டவிழ்க்கும் வெறித்தனமாக வெடித்துள்ளது.

கொசோவோவின் பிரச்சினைகள் வெறுமனே கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கவில்லை. 1998ம் ஆண்டின் கோடைகாலத்தின் போதே KLA இன் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசங்கள்



மீது சேர்ப் படையினர் தாக்குதல் நடத்தினர். இவ் ஒடுக்குமுறையின் போது 3 இலட்சம் அல்பேனிய இன மக்கள் கொசோவோவுக்குள்ளேயே அகதிகளாக இடம் பெயர்ந்தனர். 2 ஆயிரம் அல்பேனிய இன மக்கள் கொல்லப்பட்டனர். 200 கிராமங்கள் தரைமட்டமாக்கப்பட்டன.

குறிப்பாக ட்ரெனிக்கா பள்ளத்தாக்குப் பகுதிகளில் உள்ள அல்பேனிய இன மக்கள் KLAக்கு உதவினார்கள் என்று மிக மோசமாக ஒடுக்கப்பட்டார்கள். இதுவரை கண்களை மூடியிருந்த உலகம் சற்றுக் கண்களைத் திறந்தது. செப்டெம்பர் 98, 23ம் திகதி ஐ.நா. போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்து கொசோவோவிலிருந்து ஒரு பகுதி யூகோஸ்லாவியப் படைகளை மீளப் பெறுமாறு பெல்கிரேட்டைக் கோரியது.

மூன்று நாட்களின் பின் 26ம் திகதி முரேன்ஜே, ஒப்ரின்ஜே நகரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அல்பேனிய இனத்தவர்கள் 21பேரை விசேட பொலிஸ் படையினர் படுகொலை செய்து தமது பதில் என்ன எனக் கூறினர். அதே சமயம் தனக்கு எதிரான கொள்கைகளைக் கொண்ட, இராணுவ வல்லமை வாய்ந்த ஒரு நாடு இருப்பதை என்றுமே விரும்பாத அமெரிக்கா நேட்டோ முக மூடியுடன் தனது காய்களை நகர்த்த ஆரம்பித்தது.

1998 ஒக்டோபர் 13ம் திகதி கிளின்டனின் விசேட தூதுவர் ரிச்சர்ட் ஹோல்புருக்கிற்கும் மிலோசவிச்சுக்கும் இடையிலான சந்திப்பு நடந்தது. ஒக்டோபர் 8ம் திகதி KLA மீண்டும் சண்டையைத் தொடங்கப் போவதாக அறிவித்தது. சேர்ப் படையினர் இனத்துவ சுத்திகரிப்பு எனும் மிக மோசமான ஒடுக்கு முறையை ஆரம்பித்தனர். 1999 ஜனவரி மாதம் 15ம் திகதி Racak நகரில் 23 பேர் சேர்ப் படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்பகுதியை விட்டு KLA வெளியேறியதும் மேலும் 18 அல்பேனிய இனத்தவர்கள் சேர்ப்படைகளால் கொல்லப்பட்டனர். இங்கே இரத்த வெள்ளம் இப்படி ஓட இதனை எப்படி தனது நலன்களுக்குப் பாவிப்பது என்ற அரசியல் சதுரங்க நகர்த்தலில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் சர்வதேச சதிகளில் புகழ்பெற்ற தனது உளவு நிறுவனமான CIA யிடம் மிலோசவிச்சின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும்படி உத்தரவிட்டதை அமெரிக்காவின் பாதுகாப்பு உளவு நிறுவன (DIA) அதிகாரி கூற, அதை 1998 டிசம்பர் மாத ஆரம்பத்திலேயே The Observer பத்திரிகை பிரசுரித்தது.

**நன்றி - உயிர்நிழல்**

**(அடுத்த இதழில் தொடரும்)**

# சுன்னாகம் பொலிஸ் மீது பொது மக்கள் புகார்

பொது மக்கள் கொடுக்கும் முறைப்பாடுகளை புரிந்துக் கொண்டு சரியாகப் பதிவதற்கு தமிழ் தெரிந்த பொலிசார் இல்லை என்றும், மொழி தெரியாத காரணத்தால் முறைப்பாடு கொடுக்கச் செல்லும் பொது மக்கள் சில சமயங்களில் திருப்பி அனுப்பப்படுவதாகவும்,

பொலிசாரில் சிலரிடம் லஞ்ச ஊழல் பழக்கம் நிலவுவதாகவும்,

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொலிசார் பற்றி அப்பகுதி பொது மக்கள் சிலரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 39 பேர் கையொப்பமிட்டுள்ள எழுத்து மூலமான அந்த முறைப்பாடு காங்கேசன்துறை பொலிஸ் உதவிப்பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுடன் நல்லுறவைப் பேணுவதற்காக தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் இராணுவத்தினர், பொலிசார் பலர் தமிழ் மொழி கற்று பொது மக்களுடன் தமிழில் உரையாடி வருவது குறிப்பிடத்தக்கதும், பாராட்டுக்குரியதுமாகும்.

ஆனால் அதேவேளை தமிழ் தெரியாத சில சீருடையினர் பொது மக்களுடன் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதும், லஞ்ச ஊழலில் ஈடுபடுவதும் கண்டிக்கத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com

Regd. in the Dep. of Posts of Sri Lanka under (No: QD / 41 / News / 2001)





# உறுமயவும் - ஜே.வி.பி யும்

சிஹல உறுமய, மக்கள் விடுதலை முன்னணி இனப்பிரச்சினை தொடர்பாக பேசும் பாஷைகளில் வித்தியாசம் இருக்கிறதே தவிர செய்வது ஒரேவிடயத்தைதான்.

சிஹல உறுமய பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை நேரடியாக வெளிப்படுத்துகிறது. ஜே.வி.பி அதிகாரப் பகிர்வை அங்கீகரிக்காது தமிழ், முஸ்லீம் ஒற்றுமை பற்றி பேசுகிறது.

மலையகத்தில் சிங்கள இனவாதிகள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினால் தமிழ் சிங்கள இனவாதத்தை தோற்கடிப்போம் என்று ஜே.வி.பி சுவரொட்டி ஒட்டுகிறது.

சிஹல உறுமய நேரடியாகவே தமிழர் விரோத சுவரொட்டிகளை ஒட்டுகிறது. இனபேதங்களை கடந்து தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கை போராட்டம் நடத்தினால் இரண்டு தரப்பினருமே மௌனம் காக்கிறார்கள்.

சிஹல உறுமய வரலாற்றில் தோற்று போகும் ஜே.வி.பி யும் அதிகார பகிர்வு என்ற யாதார்த்தத்தை உணராவிட்டால் எதிர்காலத்தில் அவர்களும் தோற்றே போவார்கள்.




மிலோசவிக் கொடுங்கோலன் என்பதோ அவன் பொஸ்னிய மக்களுக்கும், அல்பேனியர்களுக்கும், குரோசியர்களுக்கும் செய்த கொடுமைகள் ஏன் சொந்த சேர்பியர்களில் தனக்கு விரோதமானவர் களுக்குச் செய்ததை எந்த மனிதாபிமானியும் ஏற்றுக் கொள்ளமாட் டான். அவை வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்கள்.

ஆனால் மிலோசவிக்கின் கொடுமைகள் பற்றி நீலிக்கண்ணீர வடிக்கும் மேற்குலகமும், ஐக்கிய அமெரிக்காவும் தற்போது அகதி முகாம்களில் படுகொலை புரிந்த இஸ்ரேலின் ஏரியல் சரோனின் அடாவடித்தனங்கள் பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

சிறிதுகாலம் சற்று அமைதியாகத் தெரிந்த மத்தியக் கிழக்கில் மீண்டும் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. சாடிக்கேற்ற மூடியாகவே அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி புஷ்ஷின் செயற் பாடுகள் அமைகின்றன. ஹெக் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டியது மிலேசவிக் மாத்திரமல்ல ஏரியல் சரோனும்தான்.

# வலிமையான பேனாக்களைக் கொண்ட பெண்கள்





தமது பேனாவின் வலிமையால் தாம் சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பெண்கள் இவர்கள்.

**ரஜனி திரணகம**
இலங்கை தமிழ்ப் பகுதிகளில் மக்களின் உரிமைக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் எழுதியதற்காக படுகொலை செய்யப்பட்டவர்.

**தஸ்லிமா நஸ்ரின்**
வங்காள தேசத்தில் பெண்களுக்கெதிரான இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராக எழுதியவர். அதற்காக நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டவர்.

**அருந்ததி ராய்**
நர்மதா நதிக்கரையின் ஆதிவாசிப் பெண்களின் உரிமைகளுக்காக எழுதியவர். அனைவரினதும் கடும் விமர்சனத்துக்கும் சளைக்காமல் முகம் கொடுத்த இரும்பு மனுஷி.

# ஆதரவுப் பேரணி





மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சத்தியாக்கிரக இயக்கத்திற்கு ஆதரவாக மார்ச் 12இல் ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர் அணி) வவுனியாவில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் ஒரு பகுதியைக்காண்கிறீர்கள்.

# நெல்சன் மண்டெலா- அங்சாங் சுஹி




சமகாலத்தில் கீர்த்திவாய்ந்த போராளிகள். காலாகாலத்திற்கு இத்தகைய மாமனிதர்கள் உருவாக்கத்தினாலேயே மனுக்குலம் நாகரீகமடைந்ததாக முன்னேறிய பிரிவினராக மாறி வந்திருக்கிறது.

கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ், ரோசா லக்ஸ்சம் பேர்க், லெனின், மகாத்மா காந்தி, மாஓ சேதுங், ஜவகர்லால் நேரு, சேகுவேரா, பிடல் கஸ்ட்ரோ, ஹோசிமின், இந்திரா காந்தி. தந்தை பெரியார் போன்றோர் மனித குலத்தை முன்னோக்கி வழிகாட்டி செல்வதில் பங்களித்திருக்கிறார்கள். அந்த வரிசையில் இவர்களை நாம் நினைவுகூர முடியும். நிறவெறிக்கெதிரான போராட்டத்தில் 20ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வெற்றி பெற்றவர் நெல்சன்மண்டெலா. ராணுவ சர்வாதிகார மியன்மார் ஆட்சிக்கெதிராக போராடுபவர் இன்று சிறையில் வாடுபவர் அங்சாங் சுஹி. முன்னவர் 27 ஆண்டுகளின் பின் சிறை மீண்டவர். பின்னவர் ஜனநாயகத்துக்காகவும், மனித உரிமைக்காகவும் இன்று சிறை இருப்பவர். வரலாறு படைத்திட்ட மாமனிதர்கள் இவர்கள். எமது நாட்டில் யார் யாரோ எல்லாம் மாமனிதர்கள் வேடிக்கையாக இல்லையா.

# கோபி அன்னான் மீண்டும் ஐ.நா செயலாளர் நாயகமாவாரா?

அன்னானின் பதவிக் காலத்தில் பல முக்கிய நிகழ்வுகள் இடம் பெற்றன. பலஸ்தீன, இஸ்ரேல் பேச்சுவார்த்தை, சேர்பிய பொஸ்னிய, சேர்பிய கொசோவா, சேர்பிய குரோசியா சண்டைகள் இடம் பெற்றன. ஐ.நா. கண்காணிப்பு படைகள் அங்கு அனுப்பப் பட்டன. ஈராக்கிய அமெரிக்க யுத்தமும் இக்காலகட்டத்தில் உக்கிரம் பெற்றது. ஐ.நா வின் கையாலாகாத நிலை பல சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டது.

ஆனால் இத்தகைய நிலை கோபி அன்னானின் காலத்துக்கு மாத்திரம் உரியவை அல்ல. ஐ.நா தோற்றுவிக்கப்பட்ட 50 ஆண்டுகளில் பல தடவைகள் இப்படியான நெருக்கடிகள் ஏற்பட்டன.

உலகச் சிறுவர்கள். உலகப் பெண்கள், சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வுகள் இக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஐ.நாவின் பங்கு மகத்தானது.

அகதிகள் பிரச்சினைகளில் கையாள்வதில் ஐ.நா பாரிய பங்களிப்பை வழங்கியது. கொங்கோவிலும், ருவாண்டாவிலும், ஆப்கானிஸ்தானிலும் அகதிகள் பிரச்சினைகள் பாரியனவாக இருந்தது.

கொங்கோவில் ஏற்பட்ட வெள்ளமும், குஜராத்தில் ஏற்பட்ட பூகம்பமும் பாரிய இயற்கைப் பேரனர்த்தங்கள். இவற்றில் எல்லாம் மாபெரும் மனிதாபிமானப் பணிகளை ஐ.நா மேற்கொண்டிருக்கிறது.

ஆபிரிக்கரான கோபி அன்னான் மீண்டும் பதவிக்கு வர வாய்ப்புக்கள் உண்டு. அவர் பணி தொடர வாழ்த்துவோம்.



# யாசீர் அரபாத்



இவர் நடந்து வந்தபாதை கம்பளம் விரிக்கப்பட்டதல்ல கரடு முரடானது. நம்பிக்கைகள் மெலிதாக தெரிந்த போது இருள் சூழத் தொடங்கியது. மனந்தளரவில்லை தனது மக்களை அவர் வழிநடத்துகிறார். அவர் பயணம் வெற்றி பெற வாழ்த்துவோம்.

தி. சிறிதரன் 141A. மன்னார் ரோட், தருமன்காடு, வவுனியா அவர்களால் இரத்தினபிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது

படிப்பகம்